Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 29, 2024

திங்கட்கிழமை ஜூலை 29, 2024 | ஒளி: 10 கதிர்: 016 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## சுதந்திரக் கட்சி புதன் முடிவு

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான புதிய கூட்டணி எதிர்வரும் 31ஆம் திகதி வெளிப்படுத்தும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரும்

தொடர்ச்சி P2

மகளிர் ஆசிய கோப்பை:

# இந்தியாவை வீழ்த்திய சிங்க பெண்கள்




நடப்பு மகளிர் ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் இலங்கை அணிகள் பலப்பரீட்சை, ஞாயிற்றுக்கிழமை (28) மேற்கொண்டன. இதில் இலங்கை அணி சாம்பியன் பட்டம் வென்றது.

இலங்கையின் தம்புள்ள கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் நாணய சுழற்றியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாடுவதற்கு தேர்வு செய்தது. 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 165 ஓட்டங்களை எடுத்தது. ஸ்மிருதி மந்தனா 47 பந்துகளில் 60 ஓட்டங்கள் எடுத்தார். ரிச்சா கோஷ் 14 பந்துகளில் 30 ஓட்டங்கள் எடுத்தார்.

166 ஓட்டங்களள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இலங்கை அணி விரட்டியது. அந்த அணிக்கு தொடக்கமே அதிர்ச்சிகரமாக அமைந்தது.

தொடர்ச்சி P2



## சஜித்துடன் இணைந்தார்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பியகம தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளர் நளீன் திசாநாயக்க மற்றும் பியகம பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டனர்.

தொடர்ச்சி P2

# "தேர்தல் குண்டாகவே 1,700 ரூபாய் போடப்பட்டுள்ளது"

எஸ்.கணேசன்



தோட்டத் தொழிலாளர்கள் உட்பட மலையக மக்களை ஏமாற்றி உள்ள இந்த அரசாங்கத்துக்கு வருகின்ற தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருமான பழனி திகாம்பரம் எம்.பி. தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும் என்பதுடன், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சிறு தோட்ட உரிமையாளர்கள் ஆக்கப்படுவார்கள் எனவும் கூறினார்.

ஹட்டனில் ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## ரணில் கேட்டால் அதியுச்ச ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரிக்கும் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் திங்கட்கிழமை (29) அறிவிக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

4/21 தாக்குதலுக்கான

## "ஆயுத லொறியை விடுவித்தவர் தேஷபந்து"



ரஞ்சித் ராஜபக்ஷ

உயிர்த்த ஞாயிறு (ஈஸ்டர் 4/21) தாக்குதல்களை நடத்துவதற்காக ஆயுதங்களை கொண்டு வந்த லொறியை பொலிஸார் மடக்கி பிடித்த போதும், அந்த லொறியை தேசபந்து தென்னக்கோன் என்பவரே விடுவித்தார் என்று முன்னணியின் தலைவர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஆராய்வதற்கு

# மொட்டு இன்று கூடுகிறது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை தெரிவு செய்வதற்கான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறைவேற்று சபையின் விசேட கலந்துரையாடல், திங்கட்கிழமை (29) நடைபெறவுள்ளது.

இந்த கலந்துரையாடல், விஜேராம மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்தில் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ச்சி P2

- ஜனாதிபதிக்கு கிட்டத்தட்ட 75 எம்.பி.க்களின் ஆதரவு
- 90 எம்.பி.க்கள் மொட்டுக் கட்சி உறுப்பினர்கள்
- ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை நிறுத்த வேண்டாம் என கோரிக்கை

## "பாய்வதற்காக நாம் பதுங்கி வருகிறோம்"



எஸ்.கணேசன்

"மலையக மக்களின் உரிமைசார் விடயங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. பாய்வதற்காக நாம் பதுங்கி வருகிறோம். பாய வேண்டிய நேரத்தில் மக்களுக்காக நிச்சயம் பாய்வோம்." - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## " தவறான முடிவு வரிசைக்கு வித்திடும்"



இந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் தவறான முடிவை எடுத்தால் மீண்டும் வரிசையில் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## புத்தளத்தில் இருவர் எம்.பிக்களாகுவர்

### ரிஷாட் பதியுதீன் திட்டவட்டம்

அடுத்த பாராளுமன்ற தேர்தலில் புத்தளம் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை பெரும் என்று ரிஷாட் பதியுதீன், புத்தளம் எழுச்சி மாநாட்டில் தெரிவித்தார்.

புத்தளம் பிரதான வீதியில் சனிக்கிழமை (27) நடைபெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் புத்தளம் மாவட்ட எழுச்சி மாநாட்டில் பேசும்போது கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ச்சி P2

2023இல் 10 மாதங்களில்

# 500 கொலைகள் நடந்துள்ளன

2023 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 500 கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 52 துப்பாக்கிச் சூடு காரணமாக நடந்தவை ஆகும்.

தங்காலை, நுகேகொடை, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் எல்பிட்டிய ஆகிய ஐந்து பொலிஸ் பிரிவுகளில் அதிகளவான கொலைகள் பதிவாகியுள்ளன. தங்காலை பிரதேசத்தில் மாத்திரம் 32 கொலைகள் பதிவாகியுள்ளன.

நாடு முழுவதும் 2018 ஆண்டு மற்றும் 2022 ஆண்டிக்கு இடையில் 7,017படுகொலைகள் பதிவாகியுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இந்தியாவை வீழ்த்திய சிங்க பெண்கள்

இலங்கையின் தொடக்க ஆட்டக்காரர் விஷ்மி குணரத்னே ரன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் ஹர்ஷிதா மற்றும் அணிதலைவி சமரி அத்தப்பத்து இணைந்து 87 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தனர். சமரி அத்தப்பத்து, 43 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அப்போது 12 ஓவர்களில் 94 ஓட்டங்கள் இலங்கை எடுத்திருந்தது.

சிறப்பாக ஆடிய ஹர்ஷிதாவுக்கு சப்போர்ட் செய்யும் வகையில் கவிஷா விளையாடி இருந்தார். இறுதியில் 18.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு இலங்கை அணி இலக்கை எட்டி சாம்பியன் பட்டம் வென்றது. ஹர்ஷிதா 69 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். கவிஷா 30 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் ஃபீல்டிங் செயல்பாடு மிகவும் மோசமாக இருந்தது. கேட்ச்களை டிராப் செய்தது பாதகமாக அமைந்தது.

## சஜித்துடன் இணைந்தார்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு தமது ஆதரவை நல்கும் நோக்கில் ஞாயிற்றுக்கிழமை (28) இணைந்துகொண்டனர்.

கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா முன்னிலையிலயே இவ்வாறு இணைந்து கொண்டனர்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கம்பஹா நகர சபைக்கு சுயேட்சை குழு 01 இல் போட்டியிட முன்வந்த உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டனர்.

## "ஆயுத லொறியை விடுவித்தவர் தேஷபந்து"

இவ்வாறான நிலையில், உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு மதிப்பளித்து பொலிஸ் மா அதிபர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என இலங்கை தொழிலாளர் மக்கள் முன்னணியின் தலைவர் சமீர பெரேரா தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத்தால் பொலிஸ் மா அதிபர் பதவியை ரத்து செய்த இந்த பொலிஸ் உத்தியோகத்தர் வீட்டுக்குச் செல்ல வேண்டும், பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டவர் பொலிஸ் கான்ஸ்டபிளாக இருக்கக்கூடத் தகுதியற்றவர் என்றார்.

ஹட்டனில் உள்ள தனியார் விழா மண்டபத்தில் நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில் உரையாற்றும் போதே சமீர பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகபட்சமாக இருந்தால் இன்னும் ஐம்பது நாட்கள் இருக்க முடியும், விக்கிரமசிங்க ராஜபக்ச குடும்பத்தின் அதிகாரம் இன்னும் ஐம்பது நாட்களுக்கு இருக்கும். இந்த நபரின் பெயரை, பொலிஸ் மா அதிபரின் பதவிக்கு முன்மொழிந்த போது, அவருக்கு மிகவும் விரும்பத்தகாத கடமை வரலாறு உள்ளது, போதைப்பொருள் பிடிப்பதாகக் கூறி போதைப்பொருள் கடத்தும் ஒருவரை எப்போதாவது அவர் பிடித்திருக்கின்றாரா? போதைக்கு அடிமையானவர்களே கைது செய்யப்பட்டனர். கடந்த காலங்களில் அவர், ஹோட்டலை தரைமட்டமாக்கினார். அப்போது சொன்னார். இது (ஹோட்டல்) போதைப்பொருள் விற்பனையில் கிடைத்த பணத்தில் கட்டப்பட்டது என்று.

தனக்கு கப்பம் கொடுக்காதவர்களை போதைப்பொருள் காரர்கள் எனக் கூறி, அவர்களின் சொத்துக்களை சேதப்படுத்தினார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நடத்த ஆயுதங்களை கொண்டுவரும்போது, பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட லொறியை அவர் விடுவித்தார். அவ்வாறான நபரை பொலிஸ் மா அதிபர் ஆக்கினால், நாட்டின் பாதுகாப்புக்கு என்ன ஆகும் என்று வினவினார். இந்த பொலிஸ் மா அதிபர் ராஜபக்சகளுக்கு மிகவும் பிடித்தமானவர், உயர் நீதிமன்றம் அவரது பொலிஸ் மா அதிபர் பதவியை நீக்குமாறு நேரடியாகச் சொல்கிறது.

அவரை நீக்க சட்டவாக்கம் அனுமதிக்காது என்று பிரதமர் கூறுகிறார், இது பாராளுமன்றமா? இல்லை, இது பாராளுமன்றம் அல்ல என்றார்.

## மொட்டு இன்று கூடுகிறது

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் பகிரங்கமாக தமது ஆதரவை வெளிப்படுத்தி இருப்பதுடன், கட்சியினால் வேட்பாளரை முன்வைக்க வேண்டும் என ஏனையோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இரண்டாக பிளவுபடுவதா அல்லது ஒன்றாக முன்னோக்கி செல்வதா இல்லையா என்பது குறித்து இந்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்படும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 12 மாவட்டத் தலைவர்களும் 18 அமைச்சர்களும் 30 பாராளுமன்ற உறுப்பினர்களும் பல இடங்களில் கலந்துரையாடி ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் பொருளாதார வேலைத் திட்டத்திற்கு ஆதரவளிக்க தீர்மானித்ததாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் கடந்த வியாழன் அன்று பாராளுமன்றத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் பொருளாதார வேலைத்திட்டத்திற்கு இந்த நேரத்தில் ஆதரவளிக்க வேண்டும் என தெரிவித்திருந்தனர்.

எனவே இந்த தருணத்தில் கட்சியினால் வேறு வேட்பாளர்கள் முன்வைக்கப்பட்டால் கட்சி பிளவுபடும் என முன்னாள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நேரத்தில் கட்சியில் இருந்து வேட்பாளரை முன்வைக்க வேண்டாம் என விரும்புவதாக முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெள்ளிக்கிழமை நெலும் மாவத்தையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆசன அமைப்பாளர்களின் மாநாடும் மிகவும் காரசாரமாக மாறியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த ஆகியோர் முன்னாள் ஜனாதிபதியை சந்தித்து ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை நிறுத்த வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த 112 பேர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வருகின்றனர்.

இதில் 90 எம்.பி.க்கள் மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் என்பதுடன் அவர்கள் மொட்டு சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டு நேரடியாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் மேலும் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் மொட்டு சின்னத்தில் அல்லது தேசியப் பட்டியலில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஏனைய அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் அல்லது தேசியப் பட்டியலை பிரதிநிதித்துவ படுத்துகின்றனர்.

மக்கள் ஐக்கிய முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் 03 பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 01 பாராளுமன்ற உறுப்பினர், ஐக்கிய மக்கள் கட்சியின் 01 பாராளுமன்ற உறுப்பினர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 02 பாராளுமன்ற உறுப்பினர்கள், 09 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (நிமல் சிறிபால டி சில்வா அணி) புதிய கூட்டணியின் எம்.பி.க்கள் 05, முஸ்லிம் தேசியக் கட்சியைச் சேர்ந்த 01 எம்.பி.க்கள் இவ்வாறு அரசாங்கத்திற்கு ஆதரவளித்துள்ளனர். இவர்கள் அனைவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

மேலும் பதினொரு எம்.பி.க்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வருவதுடன் அவர்கள் அனைவரும் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்து வருகின்றனர்.

அவர்கள் மொட்டுடன் கூட்டணி வைத்துள்ளனர். ஈ.பி.டி.பி கட்சிக்கு 02 எம்பிக்கள், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு 01 எம்.பி, ஐக்கிய மக்கள் சக்தி 04 எம்பிக்கள், கந்துரட்ட ஜனதா பெரமுனவுக்கு 01 எம்பிக்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு 01 எம்.பி, ஐக்கிய தேசியக் கட்சி 01, தேசிய காங்கிரஸுக்கு 01 எம். பிக்கள் என அந்த 11 எம்.பி.க்களும் பிரிந்துள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதாக இவர்கள் அனைவரும் ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

மேலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 90 எம்.பி.க்களில் ஜனாதிபதிக்கு கிட்டத்தட்ட 75 எம்.பி.க்களின் ஆதரவு இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

## "தேர்தல் குண்டாகவே 1,700 ரூபாய் போடப்பட்டுள்ளது"

" பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாய் வழங்கப்படும் என்று மே முதலாம் திகதி கொட்டகலைக்கு வந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தொழில் அமைச்சர் ஆகியோர் உறுதியளித்தனர். ஆனால் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் கூட மீள பெறப்பட்டுள்ளது.

தேர்தலில் வாக்கு வேட்டை நடத்துவதற்காக தேர்தல் குண்டாகவே 1,700 ரூபாய் போடப்பட்டுள்ளது என அன்றே நான் சுட்டிக்காட்டியிருந்தேன். அது உண்மையாகி உள்ளது. அரசாங்கமும், கம்பனிகளும் இணைந்து நாடகத்தை அரங்கேற்றியுள்ளது.

எமது மக்களை எந்நாளும் ஏமாற்ற முடியாது. எமது ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். பெருந்தோட்ட தொழிலாளர்கள் சிறு தோட்ட உரிமையாளர் காக்கப்படுவார்கள். சஜித் பிரேமதாச இது தொடர்பில் எம்மிடம் உறுதியளித்துள்ளார்.

மக்களை ஏமாற்றும் இந்த அரசாங்கத்துக்கு மக்கள் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள். மக்கள் எமது பக்கம் உள்ளனர். தமிழ் முற்போக்கு கூட்டணி மக்களுக்கு துரோகம் இழைக்காது. எமது ஆட்சியில் காணி உரிமையும் நிச்சயம் பெற்றுக் கொடுக்கப்படும்." □ என்றார்.

## சுதந்திரக் கட்சி புதன் முடிவு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவு படவில்லை என்றும், தற்போது ஒரேயொரு சட்டபூர்வமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது கையில் இருப்பதாக சிலர் கூறுகின்ற கருத்துக்கள் செல்லுபடியாகாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## ரணில் கேட்டால் அதியுச்ச ஆதரவு

கட்சியின் அரசியல் குழு கூடி இந்த முடிவை எடுக்கும் என்றார். ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க கட்சி தீர்மானித்தால், அதியுச்ச ஆதரவு அளிக்கும் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

வேறு வேட்பாளரை நியமிக்க கட்சி முடிவு செய்தால், அதற்கும் ஆதரவு அளிக்கும் என்றார்.

கட்சியின் சில எம்.பி.க்கள் தங்களது தனிப்பட்ட கருத்தின் அடிப்படையில் வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளதாகவும், அவர்கள் விரும்பியதைச் செய்வதற்கான சுதந்திரம் வழங்கப்பட்ட பின்னர் அது ஒரு பிரச்சினையாக இருக்காது என்றும் அவர் மேலும் கூறினார்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## "பாய்வதற்காக நாம் பதுங்கி வருகிறோம்"

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு மற்றும் மலையக மக்களுக்கான காணி உரிமை உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தி ஹட்டனில் ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்ற போராட்டத்தில் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கூட்டத்தில் உரையாற்றிய இராதாகிருஸ்ணன் எம்.பி மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நீதிமன்றம் விரட்டவில்லை, மக்கள் சக்தியே விரட்டியடித்தது. எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் செயற்படாவிட்டால் மக்கள் அவருக்கு பதில் வழங்குவார்கள். ஜனாதிபதி யார் என்பதை மக்களே தீர்மானிப்பார்கள்.

மக்கள் சக்தி முதன்மையானது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் எனக்கூறி ஜனாதிபதி ஏமாற்றியுள்ளார். ஆளுங்கட்சி பக்கம் உள்ளவர்கள் ஏமாற்றியுள்ளனர்.

இதை ஏற்க முடியாது.எமது ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இப்பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு காணப்படும். எமது மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும். தமிழ் முற்போக்கு கூட்டணி பாய்வதற்காக பதுங்குகிறது. பாய வேண்டிய நேரத்தில் நிச்சயம் நாம் பாய்வோம் - என்றார்.

## புத்தளத்தில் இருவர் எம்.பிக்களாகுவர்

கட்சியின் பிரதி தலைவர்களில் ஒருவரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். எச். எம். நவாவி தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றுகையில்

பிரிந்து நின்று பிரதேச வாதம் பேசி பிளவுகளை தோற்றுவிப்பதற்கு முயற்சித்தவர்களுக்கு நாம் பகிரங்க அழைப்பு விடுக்கின்றோம்.

இவ்வாரான சிறுபிள்ளைத்தனமான செயற்பாடுகளை விட்டுவிட்டு எம்முடன் இணையுங்கள் இதன் மூலம் புத்தளம் மக்கள் நன்மை அடைவார்கள். உங்களை அரவணைக்க நாம் தயாராக இருக்கிறோம்.

ஆனால் இந்த நாட்டுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் இழுக்கை ஏற்படுத்திய புத்தளம் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவருக்கு எந்த மன்னிப்பும் இல்லை.கட்சிக்குள்ளும் இடமும் இல்லை,

இலங்கை சரித்திரத்தில் விசேட அதிதிகளுக்கு விமான நிலைய நுழைவாயில் பயன்படுத்த முடியாது என்று பாராளுமன்றம் தடை விதித்த நபர் தான் இவர்.

இந்த புத்தளத்தில் அனுர குமார, சஜித் பிரேமதாச, ரணில் விக்ரமசிங்க, ரவூப் ஹக்கீம் போன்றவர்கள் கூட்டங்களை வைக்கலாம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி மட்டும் கூட்டங்களை வைக்க முடியாது என்று சில்லறைகளை ஏவி ஆட்சிச்சுருத்தும் பணியை இந்த உறுப்பினர் செய்து வந்துள்ளார்.

இது தொடர்பில் புத்தளம் மாவட்ட அரசியல் குழுவின் அதிரடி தீர்மானம் தான் பிரமாண்டமான இந்த மாநாடு என்பது சான்றாக உள்ளது.

இவ்வாறு பிரதேச வாதம் மற்றும் வடபுல முஸ்லிம்களை அகதி என்று தொடர்ந்து பேசும் ஓரவஞ்சனை மனநிலையின் பின்புறம் இங்கு மக்களுக்கிடையில் முறுகளை தோற்றுவிப்பதே ஆகும்.

இங்கிருக்கின்ற மதிப்புக்குரிய உலமாக்களுக்கு பாரிய பொறுப்பு இருப்பதாக கருதுகிறேன். இவ்வாரான விசகருத்துக்களை விதைப்பதற்கு எதிராக சமூகத்தை பாதுக்க நடவடிக்கை எடுப்பதாகும். இப்படிப்பட்டவர்கள் எமது அணியில் இருந்தாலும் அதை அங்கீகரிக்க முடியாது. இதற்கு இஸ்லாமும் ஒருபோதும் இடம் கொடுக்கவில்லை என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

வடபுல முஸ்லிம்களின் வருகை புத்தளம் மக்களுக்கு பெரும் சுமையாக தான் இருந்திருக்கும். அதை ஒருபோதும் மறுக்க முடியாது.

ஆனால் மனிதநேயத்தின் உச்சம் இந்த மக்கள் மண் முதல் பொண் வரை கொடுத்து எம்மை அன்புடன் அரவணைத்தார்கள். இன்று எமது மக்கள் இங்கும் வாக்காளர்களாக உள்வாங்கப்பட்டு உள்ளனர்.

எனது சகோதரர் ரியாஜ் அவர்களும் புத்தளத்தில் திருமணம் முடித்தவர். இது போன்ற இன்னும் எத்தனையோ பேர்கள் உள்ளனர். பலர் மீண்டும் சொந்த மண்ணில் மீள் குடியேறியுள்ளனர்.

புத்தளம் அரசியலில் வர வேண்டிய முஸ்லீம் பிரதிநித்துவம் இழக்கப்பட்டே வந்திருக்கிறது. இதற்கு காரணம் எம்மில் அரசியல் கட்சி ரீதியான பிளவுகள் என்றார்.

## 500 கொலைகள் நடந்துள்ளன

இவ்வாறான வன்முறைக் குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருவதைத் தடுக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஆய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் எண்ணிக்கை 27 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

ஏனைய ஆண்டுகளை விட கடந்த ஆண்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என இலங்கை பொலிஸ் பிரிவின் கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "தவறான முடிவு வரிசைக்கு வித்திடும்"

காலி மாநகர சபை மைதானத்தில் சனிக்கிழமை (27) நடைபெற்ற "ஒன்றாக வெல்வோம் □ காலியில் நாம்" பொதுக்கூட்டத்தில், கலந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவளித்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரம், எரிவாயு, எரிபொருள் வாங்க வரிசைகள் இருந்தன.

ஆர்ப்பாட்டங்கள் செய்த ஒரு நாடு இன்று எப்படி இருக்கிறது என்பதை கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். சஜித் பிரேமதாசவை நாட்டைக் பொறுப்பேற்கும் படி சொன்னார்கள். அவர்கள் அதை தவறவிட்டனர். ஆனால் ஜனாதிபதி சவால்களை ஏற்றுக் கொண்டார். ஆகையால், நாட்டை கட்டி எழுப்ப கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்றார்.

பச்சை, நீலம், பிரவுன் ஒரே மேடையில்

# “இதுவே நாட்டின் தேவை”



“பச்சை, நீலம், பிரவுன் ஆகிய நிறங்கள் ஒரே மேடையில் ஏறியது இதுதான் முறையானது. இதுவே நாட்டின் தேவை. இரண்டு வருடங்களுக்கு முன் இந்நாட்டு நிலைமையால் பல மனிதர்கள் நாட்டை விட்டு வெளியேறி அனாதரவாக மக்கள் ஒன்றும் சொல்ல முடியாமல் தவித்தனர். அந்த மக்களுக்காக நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்பை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டார். என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்போது மீண்டும் ஒருமுறை நாட்டு மக்கள் சுதந்திரமாக சுவாசிக்க கூடிய சூழல் உருவாகியுள்ளது. வேலை நிறுத்தங்களுக்கு அஞ்சாமல் நாட்டைப் பற்றிச் சிந்தித்து உலக நாடுகளுடன் பேசி முடிவெடுக்கும் தலைவர் எங்களிடம் இருக்கிறார். கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்ததும், சட்டத்தை மதித்து நேர்மையாக செயல்படும் ஒரு தலைவரை மக்கள் எதிர்பார்த்தனர். ரணில் விக்கிரமசிங்கவும் நேரடியாக முடிவுகளை எடுக்கும் தலைவர்.

இந்த வாய்ப்பை இழந்தால் நாட்டை மீட்க வாய்ப்பு கிடைக்காது. தந்தை தலைவராக இருந்தாலும், மகன்களால் நாட்டை ஆள முடியாது. அதை சஜித் பிரேமதாச ஏற்கனவே காட்டிக் கொண்டிருக்கிறார்.” என குறிப்பிட்டுள்ளார்.

# குழந்தையைப் பார்க்க சென்ற தந்தை, விபத்தில் பலி

கொழும்பு - காலி பிரதான வீதியின் வடக்கு பயாகல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மக்கொன, அக்கரமலை பிரதேசத்தை சேர்ந்த , ஒரு குழந்தையின் தந்தையான 25 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

களுத்துறை, நாகொட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தனது குழந்தையைப் பார்க்க மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது பேருந்தொன்றை கடந்து செல்ல முற்பட்ட நிலையில் , எதிரே வந்த லொறியுடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பயாகல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் , இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






## தர்ஷன் தர்மராஜ் ஒழுங்கை திறந்து வைப்பு

இலங்கையின் சினிமாத்துறையில், இரத்தினபுரி மாவட்டம் இறக்குவானை பகுதிக்கு சாதனையை பெற்றுத்தந்து. நம்மை விட்டு பிரிந்து சென்ற அமரர் தர்ஷன் தர்மராஜ் நினைவாக இறக்குவானை பிரதேசத்தில் ( தர்ஷன் தர்மராஜ் மாவத்த ) எனும் பெயரில் வீதி ஒன்றுக்கு பெயர் சூட்டப்பட்டது.

வீதிக்கு பெயர் சூட்டி அமைக்கப்பட்டிருந்த பெயர் பலகை, சனிக்கிழமை (27) திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழாவில், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளருமான எஸ். ஆனந்தகுமார் கலந்து கொண்டிருந்தார்.

கொடகவெல பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் பிரியந்த பண்டார,இறக்குவானை பரியோவான் தேசிய பாடசாலையின் அதிபர் மற்றும் மத தலைவர்கள் கலந்து கொண்டிருந்ததுடன் தர்ஷன் தர்மராஜ் குடும்பத்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.



## தாதியர் சங்க மாநாட்டில், அநுர

மஹரகம இளைஞர் சேவைகள் மன்றக் கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை(28) இடம்பெற்ற அகில இலங்கை தாதியர் சங்க மாநாட்டில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க கலந்துகொண்டார். புதிய தேசிய மறுமலர்ச்சிக்காக அரங்கு முழுவதும் தாதியர் நிரம்பியிருந்தனர்.

# மலையக எழுச்சி பயணத்தின் ஓராண்டு நினைவேந்தல்...

எஸ்.ஆர்.லெம்பேட்



மலையக மக்களின் 200 வது வருடத்தை ஒட்டி வேர்களை மீட்டு உரிமைகளை வென்றிட மாண்புமிகு மலையக எழுச்சி பயணத்தின் ஓராண்டு நினைவேந்தல் நிகழ்வு தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் புனித லோரன்சியார் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை(28) காலை 6.30 மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு மலையக சிவில் சமூக கூட்டிணைவு அமைப்பின் ஏற்பாட்டில் சுமார் 50க்கும் மேற்பட்ட மலையக மக்கள் தலைமன்னாருக்கு வருகை தந்து குறித்த திருப்பதியில் கலந்து கொண்டு தமது முன்னோர்களுக்கான நினைவு கூறல் மற்றும் ஓராண்டு பூர்த்தி நன்றியையும் செலுத்தி திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருப்பலியில் பின்னர் மலையக மக்கள் மற்றும் தலைமன்னார் ஊர்மனை கிராம மக்கள் ஊர்வலமாக சென்று குறித்த கிராமத்தின் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மலையக மக்களின் ஞாபகார்த்த நினைவு ஸ்தூபி இடத்தில் இன்று 7.30 மணியளவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் விளக்கேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# கட்டுநாயக்கவில் நால்வர் கைது

டி.கே.ஜி கபில

வெளிநாட்டிலிருந்து நாட்டிற்கு சட்டவிரோதமான முறையில் 1 கோடியே 37 லட்சத்து 765 ரூபா பெறுமதியான 461 சிகரெட் பண்டல்களுடன் பிரவேசிக்க முயன்ற வெளிநாட்டு பெண் உட்பட நால்வர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களில், 37 வயதுடைய சீனப் பெண் ஒருவர் மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து சனிக்கிழமை (27) நள்ளிரவு 12.00 மணியளவில் MH-179 விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது



செய்யப்பட்டுள்ளதோடு, பாணந்துறை பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடைய நபர் மத்துகம பிரதேசத்தில் வசிக்கும் 38 வயதுடைய சாரதி ஒருவரும் டுபாயிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-226 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கொழும்பில் கிளப் ஒன்றில் பணிபுரியும் பெண்ணொருவரும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 29,200 சிகரெட்டுகள் அடங்கிய 146 அட்டைப்பெட்டி சிகரெட்டுகளை தனது பயணப் பையில் மறைத்து வைத்திருந்த போது சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சா கடத்தியவர் டிப்பருடன் கைது

நிதர்ஷன் வினோத் , எம்.றொசாந்த்




யாழ்ப்பாணத்தில் இருந்து டிப்பர் வாகனத்தில் கஞ்சா போதைப்பொருளை கடத்தி சென்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி ,பூநகரி பகுதியை நோக்கி பயணித்த டிப்பர் வாகனமொன்றை சனிக்கிழமை(27) அன்று சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் வைத்து பொலிஸார் வழிமறித்து சோதனையிட்ட போது , டிப்பர் வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 கிலோ 485 கிராம் கஞ்சா போதைப் பொருளை பொலிஸார் மீட்டனர்.

அதனையடுத்து டிப்பர் வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனம் மற்றும் மீட்கப்பட்ட கஞ்சா தொகையை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## யாழில் வாகனத்திற்கு தீ வைப்பு



எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் வாகனம் ஒன்றுக்கு வன்முறை கும்பலால் தீ வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மூர் வீதியில் வசிக்கும் நபர் ஒருவர், தனது வாகனத்தை, வீட்டின் முன் நிறுத்தி வைத்திருந்த போது சனிக்கிழமை (27) நள்ளிரவு வாகனத்திற்கு தீ வைத்து விட்டு, வன்முறை கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவரால், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# புதிய வரலாற்றை படைக்கும் நடைப் பயணம்

வ.சக்தி



பேருவளையை சேர்ந்த ஸஹ்மி ஸஹீட் எனும் இளைஞன் இலங்கையின் கரையோர வீதிகள் ஊடாக சுமார் 1500 கிலோமீட்டர் தூர த்தை நட ந்து சாதனைப்படைக்க முயற்சியினை எடுத்துள்ளார்.

இவர் பேருவளையில் இருந்து ஆரம்பித்து, தொ டர்ந்து 15 நாட்கள் நடந்து சென்று கொண்டிருக்கிறார். சனிக்கிழமை (27) காலை நிந்தவூரில் இருந்து மட்டக்களப்பு குருக்கள்மடம் வரை தனது பயணத்தை நிறைவு செய்திருந்தார்.


இந்நிலையில் 50 நாட்கள் கொண்ட இந்த பயணத்தை ஞாயிற்றுக்கிழமை காலை (28) குருக்கள்மடம் கிராமத்திலிருந்து தனது பயணத்தை மட்டக்களப்பு நோக்கி ஆரம்பித்தார்.

நடைப் பயணம் மேற்கொண்டுள்ள இளைஞனுக்கு கிராமங்கள் தோறும் இளைஞர்கள் வரவேற்று அவருடன் புகைப்படங்க ளையும் எடுத்துக் கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

தனது நடைப் பயணம் தொடர்பாக அவர் கூறுகையில் சுதந்திரமான இலங்கையின் அழகான கரையோரத்தை காலால் நடந்து இரசிப்போம் எனும் தொனிப்பொருளில் தான் இந்த நடைப் பயணத்தை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## நீராடச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி மரணம்

எப்.முபாரக்



திருகோணமலை, கல்மெட்டியாவ குளத்தில் சனிக்கிழமை (27) நீராடிக்கொண்டிருந்த, மனையாவளி பகுதியை சேர்ந்த எஸ். கோகுலராஜ் (16வயது) என்பவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

திருகோணமலையிலிருந்து தனது குடும்பத்துடன் சுற்றுலா சென்று குளத்தில் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கியதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த சிறுவனின் தந்தை, திருகோணமலை பொது வைத்தியசாலையில் சாரதியாக கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கேரள கஞ்சாவுடன் பெண் கைது

ஏ. எம். கீத்

திருகோணமலை, தம்பலகாமம் பிரிவுக்கு உட்பட்ட 99 ஆம் கொலனி பிரதேசத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை (26)அன்று 500 கிராம் கேரளா கஞ்சாவுடன் பெண் ஒருவர் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தம்பலகமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ஹைரியா நகர், புல்மோட்டை -1 என்ற இடத்தை சேர்ந்த 44 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கஞ்சாவை தன் வசம் வைத்திருந்து விற்பனைக்கு முயன்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டதாக தம்பலகமம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், அவரை கந்தளாய் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது குற்றத்தை



ஒப்புக் கொண்டுதன் அடிப்படையில் ஒரு லட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்

# கஞ்சா கான்ஸ்டபிளும் நீதியின் முன்னிற்கும் சவால்களும்

சட்ட நடவடிக்கைக்குள் செல்லாத எந்தவொரு பிரச்சனையாக இருந்தாலும் அதை இருதரப்பினரும் பேசி தீர்த்துக்கொள்ள முடியாவிடின், பொலிஸ் நிலையத்திற்கு ஓடோடி செல்வர். அங்கு இரு தரப்பினரையும் விசாரணை செய்யும் பொலிஸார், சமரசம் செய்து வைப்பதற்கு முயற்சி செய்வர். இயலாது போய்விடுமாயின், நீதிமன்றத்து கொண்டு சென்றுவிடுவர்.

ஆரம்ப நீதிமன்றங்களில் முறைப்பாட்டாளர் தரப்பில் பொலிஸாரே நிற்பர், அவ்வாறான வழக்குகள் மேல் நீதிமன்றத்துக்குச் சென்றுவிட்டால், சட்டமா அதிபர் திணைக்களம், முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜராகி இருக்கும்.

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் பிரிவான பொலிஸார் இல்லாவிடின், நாட்டின், சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்து இருக்கும், மேலதிக பாதுகாப்புகளுக்காக ஏனைய படைகளை களமிறங்க வேண்டும்.

எனினும், பொதுமக்களால் நடத்தப்பட்ட போராட்டங்களின் போது, இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்தப்பட்டதில், அப்பாவி பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்ட சம்பவங்கள் ஏராளம். பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதிக்காக இன்னும் ஏங்கி கொண்டிருக்கின்றனர். இங்கும் பொலிஸாரே பாதிக்கப்பட்ட தரப்பின் பக்கம் நிற்கின்றனர்.

ஆக, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை கடைப்பிடிப்பதில் பொலிஸாரின் வகிபாகம் முக்கியமானது. அவ்வாறான பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றும் பலரின் செயற்பாடுகள், திணைக்களத்தை தலைநிமிரச் செய்துவிடுகின்றன. ஒருசிலரின் செயற்பாடுகள், தலைகுனியச்செய்துவிடுகின்றன.

வாகனத்தை சோதனை செய்யும் போது வாகனத்திற்குள் கஞ்சாவை வைத்து இளைஞர்கள் குழுவொன்றை கைது செய்ய முற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் கொள்ளுப்பிட்டி பொலிஸில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஆரம்பத்தில் இருந்தே உஷாராக இருந்த அந்த வாகனத்தில் பயணித்த இளைஞர்கள், நடப்பதை அலைபேசிகளில் வீடியோவாக பதிவு செய்து, அங்கு கடமையில் இருந்த பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, வீடியோவை சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்து. அந்த கான்ஸ்டபிளின் அருவருக்கத்தக்க செயற்பாட்டை அம்பலப்படுத்திவிட்டனர்.

அந்த கான்ஸ்டபிளின் துர்நடத்தை மற்றும் இளைஞர்களின் விவகாரம் தொடர்பில் தீர்ப்பளிக்க வேண்டிய பொறுப்பை நீதிமன்றத்திடம் விட்டுவிடுகிறோம். எனினும், பொலிஸ் கான்ஸ்டபிள் செய்த ஈனச்செயல் அம்பலமாகிவிட்டது. இனியும், பொலிஸாரின் மீதான நம்பிக்கை நூற்றுக்கு நூறு சதவீதம் அப்படியே இருக்குமென நம்ப முடியாது.

சிலவேளைகளில், பொலிஸாரின் இவ்வாறான செயற்பாடுகள் முதலாவதாக இருக்க முடியாது. இறுதியாகவும் இருக்காது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. வேறு வழிகளை கையாள கூடும். இதில், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியையும், குற்றவாளிக்கான தண்டனையையும் நீதிமன்றமே வழங்க வேண்டும்.

எனினும், கஞ்சா குற்றச்சாட்டுகளின் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, தண்டிக்கப்பட்டவர்கள், நியாயமான முறையில் கைதுசெய்யப்பட்டனரா? என்ற கேள்வி இங்கு எழுகின்றது. அம்பலத்துக்கு வந்த கஞ்சா கான்ஸ்டபிளின் மேற்படி சம்பவத்தை ஓர் உதாரணமாக எடுத்துக்கொண்டு, சட்டரீதியான நடவடிக்கையில் இறங்கினால், பெரும் சவால்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை நீதித்துறை ஏற்படும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

உண்மை பேசாதவர்கள் உளறிக் கொண்டே பேசுவார்கள். அவர்களின் அக உணர்வு உறுத்துவதால் பேச்சு சீராக இருக்காது.

உண்மை பேசுவது கடினமானதே இல்லை. சந்தோஷமான நிலைமையில் மனிதர்களை வைத்திருக்கும். மேலும் அச்சமே இல்லாத நிலையில், இவர்களின் வாழ்க்கையும் அதி உச்சகத்தில் வைத்துவிடும்.

உள்ளம் என்பது கூட உள் "அகம்" வெளிப்படையாகப் பரந்த நிலையில் எம்மை உருவாக்கியப்படி அமைய வேண்டியதாகக் கருத வேண்டும்.

என்றும் நீதி நெறிதவறாது, உண்மையுடன் வாழ்பவர்களின் விதங்களைப் பாருங்கள். அதில் ஓர் அழகு பளிச்செனத் தெரியும். இதுதே ஜஸ் எனப்படும் வியப்பான அழகு நிலை! இது ஒழுக்க வாழ்வின் முழுவடிவமாகும்.

உங்கள் ஜீவ சக்தியை பெருக்கிட பேசும் வார்த்தைகளில் தெளிவுடன் கூடிய நேர்மை துலங்கவேண்டும். இதனால் நெஞ்சத்தில் குளுமை தோன்றும். அதுவே சக்தியாக உருவாகி காரிய சக்திகளை உருவாக்கிவிடும்.

பருத்தியூர் பால-வயிரவநாதன்

# கேள்விகளை உருவாக்கும் மன்னிப்புகோரல்

லக்ஸ்மன்

இலங்கை அரசாங்கம் 41 வருடங்கள் கடந்து கறுப்பு ஜூலை அக்கிரமங்களுக்கு மன்னிப்புக் கோரியிருப்பதானது எதற்கான அரசியல் என்று தமிழ் மக்கள் மத்தியிலும், புலம்பெயர் தேசங்களிலும், சர்வதேசத்திலும் கேள்விகள் எழுந்தாக வேண்டும்.

இலங்கையின் பூர்வகுடிகளான தமிழர்களின் நிலப்பகுதிகள் காலங்காலமாக பெரும்பான்மையினரால் பறிக்கப்பட்டு மீதமுள்ளவையே தமிழர் பகுதிகளாக இப்போதுள்ளன. சுதந்திரமடைந்த காலம் முதல் தமிழர்களுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளின் உச்சமாகவே கறுப்பு யூலை எனப்படும் ஜூலை கலவரம் கொள்ளப்பட்டது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் சிங்களப் பேரினவாத அரசாலும், சிங்கள இனவெறியர்களாலும் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடூரங்களே "கறுப்பு ஜூலை" என்று குறிப்பிடக் காரணமாக இருந்து வருகிறது.தமிழ் மக்களுக்கு எதிராக 1956, 1958, 1977, 1981 ஆகிய ஆண்டுகளில் பேரினவாதிகளினதும், பேரின ஆட்சியாளர்களினதும் ஆசிர்வாதத்துடன் முன்னெடுக்கப்பட்ட வன்முறைகளின் தொடர்ச்சியே இந்த 1983 கறுப்பு ஜூலையாகும்.

1983 ஜூலை 23,24,25,26 ஆகிய தினங்களில் ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் திட்டமிட்டு தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட "ஜூலைக் கலவரம்" எனப்படும் தமிழினப்படுகொலை இலங்கைத் தமிழர்களின் மனங்களில் 41வருடங்கள் கடந்துவிட்டாலும் அது தமிழரின் மனத்தோடு ஆழமாக பதிந்து தீராத வலியாக இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது.

1983 ஜூலை 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதன் எதிரொலியாக தலைநகர் கொழும்பில் வாழ்ந்த தமிழர்களுக்கு எதிராக இந்த தமிழினப்படுகொலை அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டது.

கொழும்பு உள்ளிட்ட தென்பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் சூறையாடப்பட்டு, தமிழ் வர்த்தகர்களின் வியாபார நிலையங்கள், தமிழர்களின் வீடுகள் மற்றும் வாழ்விடங்கள், வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

வீடுகளிலிருந்தோர், வீதியால் சென்றோர், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர் என யாரும் தப்பிக்காத வகையில் தாக்கிக் கொல்லப்பட்டனர்.

முதலில் கொழும்பை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் அதன் பின்னர் ஏனைய நகரங்கள், மலையகம் என தொடர்ந்து ஏழு நாட்கள் இந்த வன்முறைகள் தொடர்ந்தன.

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான தங்கத்துரை, குட்டிமணி உள்ளிட்ட 53பேர் பொலிஸ் மற்றும் சிறைக்காவலர்களின் ஒத்துழைப்புடன் கண்கள் தோண்டப்பட்டும் கொடூர சித்திரவதைகள் செய்யப்பட்டும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இக் கலவர காலத்தில், கொழும்பின் பல பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் அகதிகளாக பெரும்பாலான தமிழர்கள் தங்கியிருந்தனர். அதன் பின்னர், பெருந்தொகையானோர் கப்பல்களில் ஏற்றப்பட்டு உங்கள் நாட்டுக்கு செல்லுங்கள் என யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டனர். இவ்வேளையில், பெரும்பாலான தமிழர்கள் நாட்டை விட்டும் வெளியேறினர். இவ்வாறு தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களுடைய வீடுகளுக்குத் தீவைத்து, சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தி விரட்டியடித்து, இரக்கமே இல்லாமல் கொலைசெய்த அரக்கத்தனமான செயற்பாடுகள் இன்னமும் தமிழர்களுடைய மனங்களிலிருந்து மறையவில்லை.

ஊரடங்கு அமுலில் இருந்ததனால், சம்பவங்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டதுடன், ஊடகங்களும் உண்மை நிலைமைகளை வெளிக்கொணர முடியாத நிலை காணப்பட்டது, அன்றைய நாட்களில் கொழும்பிலிருந்து செயற்பட்டு வந்த வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் கடுமையாக கண்காணிக்கப்பட்டனர்.

அவர்களுடைய விடுதிகளின் அறைகளிலிருந்து அவர்கள் வெளியேற முடியாதபடிக்கு கட்டுப்பாடுகள், தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு அத் தடைகளை மீறிச் செயற்பட்டவர்கள் நாட்டை விட்டும் வெளியேற்றப்பட்டனர்.

ஜூலை 23இல் ஆரம்பித்த கலவரம் மாதத்தின் இறுதி வரை நீண்டு சென்றது. 83 கலவரம் என்ற பெயரில் நடந்த தமிழர்கள் மீதான இப்படுகொலையில் 3,000 பேர் வரையானோர் உயிரிழந்திருக்கக்கூடும் எனவும், பத்தாயிரத்திற்கும் அதிகமான தமிழர்களின் வாழ்விடங்கள் தீக்கிரையாக்கப்பட்டு, கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடி அழிக்கப்பட்டதாக தகவல்கள் பதியப்பட்டிருக்கின்றன.

இனவெறியுடன் நடைபெற்ற இவ் அழிப்பின்போதும் அதே சிங்கள இனத்தைச் சார்ந்த மனிதாபிமானம் உள்ளவர்களினால் துணிவோடு பல தமிழர்கள் காப்பாற்றப்பட்டு தமது வீடுகளில் தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்து உதவியுமுள்ளனர் என்பது தமிழர்களால் மறக்கப்படவில்லை.

ஜூலைக் கலவரம் என்ற இந்தப் படுகொலையின் பின்னர் பிரிட்டன் ஊடகம் ஒன்றுக்கு நேர்காணல் வழங்கிய ஜே .ஆர்.ஜெயவர்த்தன "இப்போது யாழ்ப்பாணத்தவர்களின் எத்தகைய அபிப்பிராயத்தைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை. அவர்களைப் பற்றி இப்போது நாங்கள் சிந்திக்க முடியாது. அவர்களின் உயிர்களைப் பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை.

அவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியும் கவலையில்லை. தமிழர்களைப் பட்டினி போட்டால், சிங்களவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்" என தெரிவித்திருந்தார். அத்துடன், இப்படுகொலையை வெளிநாடுகள் சில கண்டித்தபோது "எங்கள் வேலை எங்களுக்குத் தெரியும்" என்று பதிலளித்ததுடன், "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்ற சூளுரையையும் விடுத்தார்.

பொலிஸாரும் படையினரும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முயற்சிக்காமை குறித்து 'ரைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில், "படையினரிடம் பெரிய அளவில் தமிழர்களுக்கு எதிரான உணர்வு ஏற்பட்டிருந்தது என நான் நினைக்கிறேன். கலகத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினால், அது சிங்களவர்களுக்கு எதிரான நவடிக்கையாகப் போய்விடும் என்றும் அவர்கள் (பயினர்) உணர்ந்திருந்தார்கள். உண்மையிலேயே சில இடங்களில் அவர்கள், அவர்களை (கலகக்காரர்களை) ஊக்குவித்திருந்ததை நாங்கள் கண்டோம்' என ஜெயவர்த்தன ஆகஸ்ட் 10 இல் தெரிவித்திருந்தார்.

ஆகஸ்ட் 12இல் வெளியான 'பைனான்சியல் டைம்ஸ்' பத்திரிகையில், "ஏனைய ஆசிய நாடுகளின் கலவரங்களிலிருந்து இந்தக் கலவரத்தின் தெளிவான வேறுபாடு, தமிழர்களின் வர்த்தகத் தலங்களைத் தேடி கலவரக் கும்பல்கள் கண்டுபிடித்து தாக்கியதே ஆகும். காவலர்களும், அரசப் படைகளும் கலகக்காரர்களுடன் சேர்ந்தே தாக்கினார்கள்" என எழுதப்பட்டிருந்தது.

ஆகஸ்ட் 4ல் வாஷிங்டன் போஸ்ட் "சேர்ந்து வாழ்வது கடினமானதென்றால் வடக்கில் தமிழர்களுக்கு தனி நாடு கோரும் உரிமை இருக்கவே செய்கிறது" என்று குறிப்பிட்டிருந்தது.

தமிழ்நாட்டின் பத்திரிகைகளும், இந்திய ஒன்றியத்தின் முக்கியப் பத்திரிகைகளும் இதனை தலைப்புச் செய்திகளாக்கின. இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி உள்ளிட்ட பல நாட்டுத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்த 1983 ஜூலைக்கலவரம் ஆயுதப் போராட்டம் விடுதலைப்புலிகள் தலைமையில் தீவிரமடைவதற்கு பிரதான காரணமாக அமைந்தது. தமிழர்கள், பெரும்பான்மையினமான சிங்களவர்கள் மேல் சிங்கள ஆட்சியாளர்கள் மேல் நம்பிக்கையிழந்து சந்தேகம் கொள்ளவும் வெறுப்படையவும் தலைப்பட்டனர். நாட்டில் சிங்களவர்-தமிழர்கள் ஒன்றாக இணைந்து வாழ முடியாது என்கின்ற மனோநிலைமையை ஜூலைக் கலவரம் ஏற்படுத்தியது. அந்த நிலையே இன்றுவரை தொடர்கின்றது. ஆனால் சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவம் சில கேள்விகளை மாத்திரமே தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது.

கறுப்பு ஜூலையின் பின்னர் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை என்பது இலங்கை அரசியலில் ஏனைய விடயங்களை விட பிரதான பிரச்சினையாக மாறியிருந்தது. 2009ஆம் ஆண்டுவரை ஆயத யுத்தம் நடைபெற்றது. முள்ளிவாய்க்காலில் யுத்த மௌனிப்புக்குப் பின்னர் 15 வருடங்கள் கடந்தும் விட்டது, இப்போதும் அப்பிரச்சினை பற்றி எரிகின்றதாகவே இருக்கின்றது.

இதுவரை காலமும் நடைபெற்ற படுகொலைகளுக்கு நீதி கிடைக்கவில்லை. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கவில்லை. கிடைக்கப் போவதுமில்லை என்ற நம்பிக்கை மாத்திரம் தமிழர்களிடம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில்தான் அரசாங்கம் 41 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஜூலைக் கலவரத்துக்கு மன்னிப்புக் கோரியிருக்கிறது. இந்த வெறும் மன்னிப்பு எதனைக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதுவே புதிர்.

விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்ட பின்னரும் வெளிநாடுகளில் புலிகள் இயக்கத்தைச் தடை செய்வதற்காக இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தீவிரமாக இயங்கி வருகிறது. இதற்கு ஐரோப்பிய ஒன்றியம் 6 மாத காலம் தடைசெய்ததை பரப்புரை செய்கின்றமை எடுத்துக்காட்டு. தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதற்கும் பௌத்த விகாரைகளை அமைப்பதற்கும் அனுசரணைகளைக் கொடுக்கப்படுகிறது.

13ஐக் கூட முழுமையாக அமுல்படுத்துவதற்கு அரசாங்கமும் பேரினவாதமும் தயாராக இல்லை. சிங்கள காணி அத்துமீறல்கள் தடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் வெறும் மன்னிப்பு மாத்திரம் எதனைச் செய்யும்.

அவ்வாறிருக்க, ஜனநாயகத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு தீர்வை வழங்காது நேர்மையான மனச்சாட்சிகளை இருளாக்கிய ஜூலைக் கலவரத்துக்கு மன்னிப்புக் கோருவதும் சிறுபான்மை மக்கள் மீது பிரயோகிக்கப்படும் மற்றொரு ஏமாற்று அரசியலாகவே பார்க்கப்படவேண்டும்.

## கடிதங்கள்

### பாடசாலை மூடப்படுமா?

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் மூடப்படும் அல்லது இணைக்கப்படும் பாடசாலையாக பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம் மாறி உள்ளது.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் பெரியகுளம் கிராம அலுவலர் பிரிவில் இவ் ஆரம்ப பாடசாலை உள்ளது.

480 குடும்பங்கள் இக்கிராமத்தில் வசித்த போதிலும் ஆரம்ப பிரிவுக்குரிய மாணவர்கள் இக்கிராமத்தில் மிகக் குறைந்தளவில் காணப்படுவதன் காரணமாக இப்பாடசாலையினை மூடுவதா அல்லது இணைப்பதா என்ற கோணங்களில் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் ஆராயப்பட்டு வருகின்றன.

இப்பாடசாலையினை இணைப்பதானால் அருகில் உள்ள கட்டைக்காடு பாடசாலையுடன் இணைப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

பெரியகுளம் கிராமத்தில் 480 குடும்பங்கள் உள்ள போதிலும் சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இப்பாடசாலையில் இணைக்காமல் அருகில் உள்ள பாடசாலைகளில் இணைத்திருப்பதன் காரணமாகவும் ஐயனார் வித்தியாலயத்தில் மாணவர்களின் தொகை வீழ்ச்சி அடைந்துள்ளது.

எனவே பாடசாலையை மூடாது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுமாறு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாணவர்கள் மற்றும் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

# பால்நிலை ரீதியாக நூல் விமர்சனம் பால்நிலை (Gender)



திருச்செல்வம் ஜனனி
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்



எழுத்தாசிரியர் : லதா (Writer)

வெள்ளிக்கிழமை தொடர்ச்சி...

32.இப்போதைய தேவைகளையும் எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையும்

பெற்றோர்கள் குழந்தைகளுக்கு குற்றங்களை முற்றிலுமாக ஒழிக்காதவரை, அவற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

பெற்றோர்களும் வீட்டில் உள்ள மற்ற பெரியவர்களும், தத்தம் மகன்களை, வீட்டிலும், வெளியேயும் பெண்களை மதிக்கும் குணத்தை, வாழ்ந்து காட்டியோ அல்லது அவர்களுக் குச் சொல்லியோ வளர்த்தல் வேண்டும். இது குறித்த விழிப்புணர்வைப் பெற்றோர்களிடையே ஏற்படுத்துதல் வேண்டும்.

பாலுறவு குறித்த ரகசியத்தன்மை அகற்றப் பட்டு, அது பெற்றோர்கள், தத்தம் குழந்தைகளுடன் மேற்கொள்ளும் ஆரோக்கியமான உரையாடல்களின் ஒரு பகுதியாக ஆதல் அவசியம்.

உடலுறவின் போது, அதிக அளவில் மக்கள், தங்கள் எண்ணத்தாலும், மனங்களாலும், உடல்களாலும், இன்னும் வெளிப்படையாக இருந்தால், உலகம் இன்னும் நல்ல இடமாகமாறும் என்பதில் ஆசிரியர் உறுதியாக கூறுகிறார்.

தற்போதைய, ஆணாதிக்க, பெண்ணைப் பொருளாக எண்ணும் சமுதாயத்தில், இத்தகைய ஒரு மாற்றம் நிகழுமேயானால், உடலுறவு குறித்த பார்வையிலும், அணுகுமுறையிலும், பெரிய அளவிலான நல்லமாற்றங் களைக் காணலாம். இத்தகைய ஆபத்துகளிலிருந்து, காப்பாற்றிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தங்கள் இல்லாத ஒருநாள் வரலாம்.

அந்தநாளே, ஓர் ஆணும், பெண்ணும் தங்கள் தாம்பத்திய உறவை, மனரீதியாக வும்,உடல்ரீதியாகவும் மகிழ்ச்சியுடன் மேற்கொள்ளும் நாளாகும்.

அந்தநாளே, நாம், ஆண்ஃபெண் என்ற உள ரீதியான அகங்காரம் இன்றி, ஆன்மத்தின் தூய இன்பத்தை நுகரும் நாளாகும்.

ஒட்டுமொத்தமாக பாலியல் சார்ந்த கண்ணோட்டத்தினை பெண்களின் பார்வையிலிருந்து ஆண்கள் தங்களின் விந்துவைக் கழிப்பதற்குரிய ஒரு கழிப்பறையாக யோனித் துவாரத்தினை பயன்படுத்த வேண்டாம் என்பதை முகத்திலடித்தால் போல் முன் வைக்கிறது இந்நூல்.

காமம் என்பது ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவானது.

அதை ஆண்கள் மட்டும் சொந்தம் கொண்டாட பெண்கள் போகப் பொருளாக பாவிக்கப்படுகிறனர்.

70% பெண்கள் உடலுறவில் தாங்கள் உச்சம் என்பதை அனுபவிப்பதில்லை என்பதை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

பெண்ணின் யோனித்துவாரமானது ஆண்கள் தமது விந்துவைக் கழிக்க அமரும் கழிவறை இருக்கையாக உபயோகப்படுகிது.

நாம் காமம் என்ற ஒன்றை மறைத்துவைக்க, அதை சொல்லாக பிள்ளைகளிற்கு ஆர்வம் ஓர் அவதூறுச் பயன்படுத்த அதன் மேலான அதிகரிக்கறது.

அதைத் தேடியோ, இல்லை புரிதலைத் தேடியோ வெளியில் செல்லும் போதுபல இன்னல்களைச் சந்திக்கின்றனர். எனவே காமம் என்ற ஒன்றை மறைக்கத் தேவையில்லை அதை வெளிப்படையாகவே சமூகத்தால் அங்கீகரிக்கப்படல் வேண்டும் பெண்களிற்கு கற்பு என்ற ஒன்றைத் திணித்துஅவர்களின் காம உணர்வுகளை ஆண்டாண்டு காலமாக அடக்கி ஒடுக்க வைத்திருக்கிறோம்.

காமம் தொடர்பாக பெண்கள் பேசவே கூடாது என்ற சமூதாய நிலை. அதையும் தாண்டிபேசினால் அவளின் நடத்தையைகுறை வழக்கமாகிறது. கருத்தை எதிர் கொள்ளமல் கூறுதல் கருத்தால் அவளின் ஒழுக்கத்தை கேள்வி கேட்கும் சமுதாய நிலையே என்னவென்று சொல்வது..? காமம் அனுபவிக்க பெண்கள் வேண்டும்

மாதவிடாய் நிறுத்தத்திற்குப் பின்னர் பெண்களிற்கு காமஉணர்வு தோன்றவே தோன்றாது என்னும் கருத்தை பொய்யென எடுத்துரைக்கிறார் லதா.

கற்பு என்னும் போர்வையைப் போர்த்தி பெண்ணின் இயற்கை உணர்வுகளை அடக்கிவைக்க கற்றுக் கொடுத்தது போல் வயதைக் காட்டியும் அவளின் உணர்வுகளைக் கொலை செய்துவிடும் முயற்சி என்று சாடுகிறார்.

கற்பு என்ற கற்பனையின் அடிப்படையிலானது இம் மனத்தடை, தன் விருப்பத்தையும் போதாமையையும் சொன்னால் தன்னை வேறுமாதிரியாக இழிவாக நினைக்கலாம் என்ற அச்சம் ஆண் விரும்பும்போது மறுத்தால் அவன் வேறு பெண்ணை நாடிச் சென்றுவிடுவான் என்ற கலக்கம், குழந்தைகள் நலத்துக்கு ஊறு நேரும்கு டும்ப அமைதிகெடும் தன் தன்மானத் துக்கு இழுக்கு சமுதாய அவதூறு பற்றிய எண்ணம் போலானவை ஒருபுறம்.

குழந்தைகள் பெற்று வளர்ந்த நிலையிலும் மாதவிலக்கு நின்று விட்ட போதும் இல்லற உறவின் மீது நாட்டம் இராது, தேவை இல்லை என்ற

தவறான நம்பிக்கைகள் மற்றொருபுறம். இவை பெண்ணின் மனத் தடைக்கு வலுவான காரணங்களாவதை ஆசிரியர் நேரடித் தரவுகள் மூலம் அரண் செய்துள்ளார். இத்தகைய மனத்தடையால் பெண் தான் அறியாமலேயே மனநோயாளிஆகின்றாள்.

வாழ்க்கை முழு ஈடுபாடின்றி இயந்திரத் தனமாகிறது. இதனால் தன்னைமீறிய மனஉளைச்சல்! அவளுடைய இல்ல அலைகளாக பணிகளில் தடுமாற்றம், தன்முனைப்பு, ஏற்படுகின்றன. இயல்பாக இயங்கமுடியாத மனநலச் சிக்கலில் சிக்குகின்றாள்.

வெறுமையும் விரக்தியும் ஏமாற்ற முமாக வெளியே சிரித்து உள்ளே புகையும் இரட்டை வாழ்க்கை வாழ நேரிடுகிறது! அவன் மகிழ்ந்து தான் மகிழ்ந்து அவன் வாங்கித் தரும் பூ, புடவை, நகையில்தன் சமுதாய மதிப்பைப் பேணித் தமக்கென்ற இருப்பு எதுவுமின்றி அவனைச் சார்ந்து அவனுக்காகவே வாழ்கின்றாள். இந்த இரண்டாம் நிலை தொடர்கின்றது. படித்த பெண்,உயர் கல்விப் பெண், படிக்காத பெண் என்ற வேறுபாடு இல்லை. இது சமுதாய ஊனமே.

கருத்தொருமித்த காதல் என்பது ஒருவர் மற்றவருடைய விருப்பு வெறுப்புணர்வுகளையும் உரிமைகளையும் கற்பு என்ற கற்பனைக்கு அப்பாற்பட்டு மதிப்பதில் வெளிப்படுவதாகும்.

தம் குடும்பத் தேவைகள், கடமைகளுக்குக் குறைவின்றிப் பிற ஆண் பெண் நட்புறவை அனுமதிக்க வேண்டும்! ஒருவருக்கு ஒருவர் புரிதலுடனும் இசைவுடனும் தொற்றுக்கு இடமற்ற உறவில் தவறில்லை, இது தனி மனித உரிமையாகும் என்பதைத் தலைமை நீதிமன்றம் அண்மையில் உறுதிசெய்துள்ளது. குடும்பங்களிலும் ஆண் பெண் தனித்தனி அலகு என்ற சமுதாயச் சமன்மைக்குப் பெண்ணின் இரண்டாம் நிலையும் மனத்தடையும் நீங்க வேண்டும் என்பதை நூல் உணர்த்துகிறது.

இன்றைய தேவைகளும் பெண்களும், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் வன்புணர்வுகளுக்குச் சட்டமும் தண்டனையும் மட்டுமேபோதாது ஏனைய உறுப்புகள் போன்றவையே பாலியல் உறுப்புகள்ஏ னைய உணர்வுகள் போன்றதேபாலியல் உணர்வு, இது இருபாலருக்கும் பொதுவே, இதில் மறைக்க வேண்டியது எதுவும் இல்லை, தூய்மையும் இழிவுமில்லை என்ற விழிப்புணர்வுக்குப் பாலியல் கல்வி கட் டாயம் வேண்டும்.

வீடுகளிலும் பொதுவிலும் இது பற்றி எத்தடையும் இன்றிப் பேசும் இயல்பான நிலை உருவாக வேண்டும். பெண் மனத்தடை நீங்கிப் பாலியல் உறவில் நிறைவு பெற வேண்டும். ஆணின் கழிவறை இருக்கை என்ற நிலை நீங்க வேண்டும். ஆண்கள் பெண்களின் பாலியல் உறவு இன்பத்தின் முழுமை பற்றிச் சிந்திக்க வேண்டும். “சுய இன்பம்" தவறோ, ஊறோ இல்லை எனும் மருத்துவக் கருத்தை மனம் கொள்ள வேண்டும்.

(இத்தகைய மாற்றங்கள் என் “அக விடுதலையே பெண் விடுதலை நூலில் வலியுறுத்தப் பெற்றுள்ளன).

பெண் விடுதலை பேசும் நூல்களுள் இந்நூல் புதிய துணிச்சலான முயற்சி, பேசக் கூடாதென்ற பேசாப் பொருளை விரிவாகத் தரவுகளுடன் பேசுகிறது.

முற்றும்.

Partner Demo Day 2024 ஏற்பாடு செய்தது

# SLT-MOBITEL Enterprise







SLT-MOBITEL Enterprise இனால் SME Solution Partners' Demo Day 2024 அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இலங்கை முழுவதிலும் காணப்படும் பரந்தளவு நிறுவனசார் வாடிக்கையாளர்களுக்கு காணப்படும் பல்வேறு வியாபாரத் தீர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

பதிவு செய்திருந்த தீர்வுப் பங்காளர்களை இந்நிகழ்வு ஒன்றிணைத்து, வியாபார முன்னிலையாளர்களுக்கு நவீன தீர்வுகளை வெளிப்படுத்தியிருந்ததுடன், அதில் கணக்கு முகாமையாளர்கள், தீர்வு பொறியியலாளர்கள் மற்றும் பிராந்திய விற்பனை மற்றும் செயற்பாட்டு அணியினர் என பலரும் அடங்கியிருந்தனர்.

Demo Day 2024 என்பது,SLT-MOBITEL Enterprise இன் விற்பனை மற்றும் செயற்பாட்டு அணியினரின் ஆழமான அறிவைக் கொண்டு, சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களுக்கு புரட்சிகரமான பங்காளர் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பது மற்றும் இலங்கை முழுவதிலும் பரிபூரண வியாபார தொழில்நுட்ப தீர்வுகளை விநியோகிக்கும் நிறுவனத்தின் ஒப்பற்ற கொள்ளளவை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

வியாபாரங்களின் பரந்தளவு தீர்வுகளை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய வகையில், மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க தொழில்நுட்ப தீர்வுகள் தொடர்பில் நிபுணத்துவ வழிகாட்டல்களை நிறுவனம் வழங்குவதை வெளிப்படுத்துவதாக இந்த மூலோபாய செயற்திட்டம் அமைந்திருந்தது. அதனூடாக, வியாபாரங்களின் முன்னேற்றத்துக்கு அவசியமான தொழில்நுட்ப தீர்வுகளுக்கான நிபுணத்துவ வழிகாட்டலுக்கு வலுவூட்டி, வியாபாரங்களுக்கான முன்னணி தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் SLT-MOBITEL இன் நிலையை மேலும் உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

SLT-MOBITEL Enterprise இனால் ஒற்றை நிலை பொறுப்புக்கூறல் மற்றும் ஒரே கூரையின் கீழ் வாடிக்கையாளர்களின் பல்வேறு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவ தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியும் என்பதை விளக்கும் வகையில் Demo Day அமைந்திருந்தது.

SLT-MOBITEL வலையமைப்பின் ஏற்றுக் கொள்ளத்தக்க பங்காளர்களிடமிருந்து தங்கியிருக்கக்கூடிய விற்பனைக்கு பிந்திய ஆதரவினூடாக வாடிக்கையாளர்கள் எவ்வாறு அனுகூலம் பெறலாம் என்பதை விளக்குவதாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது. அதனூடாக, தனிநபர் நிறுவன கட்டமைப்புகள் மிருதுவாகவும், வினைத்திறனாகவும் இயங்குவதை உறுதி செய்து கொள்ள முடியும் என்பதைப் பற்றிய விளக்கங்களும் வழங்கப்பட்டிருந்தது.

மேலும், வியாபார தேவைகளுடன் பொருந்தும் வகையிலும், அதனூடாக வளர்ச்சி மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை உருவாக்க முடிவது தொடர்பில் கவனம் செலுத்தும் பல்வேறு தீர்வுகளைப் பற்றிய விளக்கங்களும் வழங்கப்பட்டிருந்தன.

SLT-MOBITEL நிறுவனசார் வியாபார பிரதம வணிக அதிகாரி லக்மால் ஜயசிங்க கருத்துத் தெரிவிக்கையில், “பங்காண்மை வழிமுறையுடன், நாம் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு மையமொன்றை ஏற்படுத்தி, வாடிக்கையாளர்களின் தன்னிறைவு மற்றும் திருப்தியை மேம்படுத்தி, அதனூடாக அவர்களின் கொள்முதல் மற்றும் நிர்வாக செயன்முறைகளை மேம்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்கின்றோம். இலங்கையில் வியாபாரங்களுக்கு முன்னணி தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநராக திகழ்கின்றமைக்கான எமது அர்ப்பணிப்பின் எடுத்துக்காட்டாக இந்நிகழ்வு அமைந்துள்ளது.” என்றார்.

இந்த பங்காளர் வலையமைப்பு மற்றும் உள்ளக நிபுணத்துவத்தை ஒன்றிணைத்து SLT-MOBITEL Enterprise இனால், நிறுவனசார் வாடிக்கையாளர்களுக்கு நவீன வியாபார தொழில்நுட்ப தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கான தமது அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. Partner Demo Day 2024 இனால், சிக்கல்கள் இல்லாத, பரிபூரண தொழில்நுட்ப தீர்வுகளை நாடும் வியாபாரங்களுக்கான ஒரே சிறந்த தீர்வாளராக நிலைநிறுத்தும் SLT-MOBITEL Enterprise இன் நிலை மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. பெருமளவு பிராந்திய பிரசன்னத்துடன், SLT-MOBITEL Enterprise இனால் இந்த மேம்படுத்தப்பட்ட தீர்வுகள் வாடிக்கையாளர்களின் அருகாமையில் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், நாடு முழுவதிலும் அணுகல் திறன் மற்றும் பிரத்தியேகமான சேவை போன்றன மேம்படுத்தப்பட்டுள்ளன.

# கொமர்ஷல் வங்கிக்கு SPO




சுற்றாடல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) தொடர்பான மதிப்பீடுகளை வழங்கும் ஃபிட்ச் சொல்யூஷன்ஸ் நிறுவனமான Sustainable Fitch இலிருந்து, கொமர்ஷல் வங்கி தனது நிலைபெறுதகு பிணைய திட்டப்பணிக்காக, இரண்டாம் தரப்புக் கருத்தை (SPO) பெற்றுள்ளது.

SPO என்பது சர்வதேச மூலதன சந்தைகள் சங்கத்தின் (ICMA) பசுமைப் பிணைய கோட்பாடுகள் 2021 உடன் இணைந்த மூன்றாம் தரப்புக்கான அங்கீகாரம் ஆகும். SPO இன் பற்றுச்சீட்டானது பாலின சமத்துவம் மற்றும் சமத்துவத்தை ஆதரிக்கும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக திட்டங்களுக்கு நிதி திரட்டுவதற்கு வங்கிக்கு உதவுகிறது.

வங்கியின் நிலைபெறுதகு பிணைய திட்டப்பணிக்காக (Sustainable Green Bond) பெறப்பட்ட SPO பற்றி கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க கருத்து தெரிவிக்கையில், ‘நிலைபெறுதகு தன்மையின் மீதான எங்கள் கவனம் தற்போது மெய்நிகர் ரீதியில் ஒவ்வொரு செயல்பாட்டு அம்சத்தையும் உள்ளடக்கியதுடன் மற்றும் நிலையான பிணையப் பத்திரம் வழங்குவது வங்கியின் நிலைத்தன்மையை நோக்கிய பயணத்தில் அடுத்த மைல்கல்லை குறிக்கும். இந்த நோக்கத்திற்காக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பிணையப் பத்திர கட்டமைப்பை நாங்கள் பெற்றிருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைவதுடன் மேலும் எங்கள் நிலைபெறுதகு தன்மைக்கான வரைபடத்திற்கான அவர்களின் உதவி மற்றும் பங்களிப்பிற்காக GGGI மற்றும் Sustainable Fitch ஆகியோருக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.’ என்றார்.

கொமர்ஷல் வங்கியின் திட்டப்பணியின் கீழ் தகுதியான பசுமைத் திட்டங்களில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல், பசுமை கட்டிடங்கள், சுத்தமான போக்குவரத்து, வாழ்க்கை வளங்கள் மற்றும் நில பயன்பாட்டிற்கான சுற்றுச்சூழல் ரீதியிலான நிலையான முகாமைத்துவம், நிலையான நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவம் காலநிலை மாற்றம் ஆற்றல் திறன், மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு மற்றும் சுற்று-பொருளாதாரம் தழுவிய தயாரிப்புகள், உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் செயல்முறைகள் என்பன உள்ளடங்குகின்றன.

தகுதியான சமூகத் திட்டங்களில் நியாயமான விலை அடிப்படையிலான உள்ளகக் கட்டமைப்பு, அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகல், வீடமைப்பு தேவைகளுக்கான உதவி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் நிலையான உணவு முறைமைகள் ஆகியவை அடங்கும். சமூக திட்டங்கள் குறைந்த வருமானம் முதல் மிதமான வருமானம் கொண்ட தனிநபர்கள் மற்றும் குடும்பங்களை இலக்காகக் கொண்டுள்ளன.




# “விதைக்க வேண்டும்”

**ராதாகிருஸ்ணன் பூங்கோதை**
நான்காம் வருடம் கல்வியியல்
சிறப்புக் கற்கை மாணவி
கல்வி பிள்ளைநலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

“சாதனை புரிய ஆசைப்படுபவன் புத்தகங்களோடு இருப்பான், சாதித்தவன் புத்தகத்தில் இருப்பான்” என்பதை இன்று பலரும் மறந்தே செயற்படுகின்றனர். இன்றைய உலகில் மாற்றம் ஒன்றே மாறாதது. எத்துறைகளிலும் மாற்றங்களானது இடம்பெற்றுக் கொண்டுதான் வருகின்றன. அந்தவகையில் மடமையில் மூழ்கியிருந்த ஆரம்ப கால மக்களிடம் கல்வியின் எழுச்சி குறைவாகவே காணப்பட்டது.

இதன் விளைவினால் அன்றைய சமூகம் அறிவின் விருத்தியிலும், சமூக முன்னேற்றத்திலும் குறைவான போக்கைக் கொண்டே காணப்பட்டனர். பல்வேறு அறிஞர்கள், கல்வியே சமூக மாற்றத்திற்கான முக்கிய முகவர் என்று குறிப்பிட்டதுடன் மட்டுமல்லாது மக்களிடையே உள்ள மனோபாவங்களையும், மதிப்புக்களையும் மாற்றி அவர்களின் முன்னேற்றத்திற்கான விருப்பை உருவாக்கும் என்று எதிர்பார்ப்புகளை வளர்ப்பதாகவும், அவற்றை மனித வாழ்வில் நடைமுறைப்படுத்துவதாகவும் கல்வியை அமைக்க முனைந்தனர்.

அந்தவகையில் சமகால அறிவை அதிகரிக்கவும், தற்போதைய உண்மைகள் பற்றிய தரவுகளை பரப்புவதற்கும் கல்வியின் மூலம் அறிவியல் கருத்துக்களும் மக்களிடையே பரப்பப்பட வேண்டும் என்ற நோக்கை கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் ஆரம்பகாலத்தில் அறிவின் விருத்தி குறைவாக இருந்ததினால் காணப்பட்ட மடமை செயல்கள் இன்றைய நவீன உலகிலும் அறிவின் விருத்தி அதிகரித்து காணப்பட்ட போதிலும் அதே மடமை செயல்கள், எண்ணப்போக்குகள் இன்றும் அதிகமாகவே மேலோங்கி உள்ளன. இது இலங்கை உட்பட அனைத்து உலக நாடுகளிலும் கல்வியில் விமர்சனத்துக்கு உள்ளாக்கின. இதன்படி சமூகத்தின் அத்தியாவசிய மாற்றத்திற்காக கல்வியின் அடிப்படை திட்டங்களானது கருவியாக வடிவமைக்கப்பட்டு கல்வி வழங்கும் நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றையே நாம் சமூக மாற்றத்திற்கான கல்வி என்கின்றோம். இதனூடாக கல்வி ஒரு சமூக மாற்றத்திற்கான கருவியாக அறிவு, பயிற்சி மற்றும் திறன்களை பிள்ளைகளுக்கு வழங்குவது மட்டுமல்லாது, இளைஞர்களிடையே புதிய சிந்தனைகளையும் அணுகுமுறைகளையும் ஏற்படுத்துவதுடன், சமூக முன்னேற்றத்தினூடான கல்வி முன்னேற்றத்தை தடுக்கும் பழைய மூடநம்பிக்கைகள் மற்றும் மதிப்புகளை மாற்ற வழியமைத்து சமூக மாற்றத்திற்கான கல்வியின் குறிக்கோள்கள் மற்றும் முறைகளில் சமுதாயத்தை மாற்றுவதற்கான திட்டங்களாக எண்ணக்கருக்கள் பலவற்றை உட்புகுத்தியதுடன் கல்வியில், மாறிவரும் சூழலிற்கேற்ப தேவையான அனைத்து கூறுகளையும் உள்ளடக்கி மாணவர்கள் மூலம் சமூகத்தை முறையாக மாற்ற சமூகமாற்றத்திற்கான கல்வி கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இதனூடாக சமூகம் பல நன்மைகளை பெற்று வருகின்றது.

கல்வி என்பது ஒரு சமூக நிறுவனம். அறிவு, திறமை போன்றவற்றையும் தந்து ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை, போன்றவற்றின் மூலம் மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடைய செய்து அறிவு சார்ந்த சமூகம் ஒன்றினை உருவாக்குகிறது. ஆசிரியர்கள் மூலமே சமூக பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வினை பெற்றுத் தரமுடியும் . சமூகத்தில் ஓர் ஆற்றல் மிக்க உறுப்பினராக விளங்கவேண்டுமானால் சமூக மதிப்புகள், குறிக்கோள்கள், நம்பிக்கை,விருப்பங்கள், பழக்க வழக்கங்கள், பண்பாடு போன்றவற்றை விதைக்க வேண்டும்.

அதாவது மனிதன் ஒரு கவிஞனாகவோ, தத்துவமேதையாகவோ, ஒரு நல்ல ஆசிரியாராகவோ, ஒரு திறமை வாய்ந்த மனிதனாகவோ வளரக் கல்வி மிகவும் அவசியம். எனவே, ஒரு சிறந்த சூழ்நிலையை உருவாக்க உடல்,உள்ளம், மனவெழுச்சி, சமூக சிந்தனை ஆகிய சிந்தனைகள் வளர கல்வி அவசியம்.

ஒரு தனி மனிதனின் திறமைகள், அவன் சமுதாயப் பண்பாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றமடைய கல்வி துணைபுரியும்.

கல்வியாளர்கள் கூற்றின்படி, இளைய தலைமுறையினரை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது.

காலவோட்டத்திற்கு ஏற்ப மனிதனின் அறிவின் விருத்தியின் பயனால் கல்வியின் நோக்கங்களும், அறிவின் விருத்தியும் மேம்பட்டு சென்றதுடன், நவீன உலகமயமாதலுக்கும் உள்ளாகி இன்றைய உலகில் சமூகமானது பாரிய தொழில்நுட்ப,கணினி மற்றும் இயந்திர அறிவியல் போன்றவற்றை கொண்டிருக்கின்றது.

இதனால் கூட்டாக வாழ்ந்த ஆரம்ப கால மக்கள் நவீனத்துவமடைந்தன் பின்னர் சுய தேவை சுயநலம் என்பவற்றை கொண்டிருப்பதனால் ஆரம்பகாலத்தில் சமூக செயற்பாடுகளுக்கு மாற்றாக கலவரம், ஏற்றத்தாழ்வு, வர்க்க அடிப்படையில் நோக்கல், இனவாதம்,மதவெறி என சமூக சீர்கேடான செயல்களானது அதிகரித்து வருகிறது.

இதனாலேயே சமூக மாற்றத்திற்கான தேவையானது உணரப்பட்டதுடன்,பேசுபொருளாகவும் மாறியது. சமூகத்தினை சிறந்த முறையில் கட்டமைக்க, பல மாற்றங்களை சமூகத்தில் கொண்டு வர பல திட்டங்களானது கல்வி அறிஞர்கள் மற்றும் அரசாங்கத்தினாலும் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சமூகமாற்றம் என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் கல்வியில் ஒரு உத்தியாக அல்லது கருவியாக பயன்படுத்தி சமூக மாற்றத்திற்கான கல்வி எனும் புதிய கல்வியின் நோக்கில் பல எண்ணக்கருக்களை அதனுள் கொண்டுவந்து இன்றுவரை செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில், இன்றைய நவீன யுகத்தில் கல்விக்கான அனைத்து வாய்ப்பு, வசதிகள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பன திறந்து விடப்பட்டுள்ளன.

சமூக மாற்றத்தினை வழிநடத்துவதிலும் பிரதான பங்கு கல்விக்கு உண்டு. சமூகத்திற்கான விழுமியங்களை உருவாக்குவதிலும் சமூக மூலதனங்கள், ஒற்றுமை, சகிப்புத்தன்மை, ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்தல், நட்புணர்வு ஆகியவற்றை சமூக கட்டமைப்புக்குள் பலப்படுத்துவதிலும் கல்வியின் பங்களிப்பு முதன்மையானது.

கல்வி என்பது அனுபவங்களை ஒழுங்குபடுத்துவதும் மீள அமைப்பதுமாகும். கற்றல் அனுபவம் மிக முக்கியமான ஒன்றாகும்.

ஒவ்வொரு தனி மனிதனும் கல்வியினால் பண்படுத்தப்படுகின்ற போது சமூகமும் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. சமூக முன்னேற்றத்துக்கு கல்வி எவ்வாறு பங்களிக்கின்றது என்பதனை விரிவாக எடுத்து நோக்குவோமானால் கல்வி கற்கும் மாணவர்கள், கல்வி கற்பவர்கள், திறமைசாலிகள், கல்விசார் தொழிலில் ஈடுபடுபவர்கள் என பலவகையானோர் சமூகத்தோடு ஒன்றித்திருக்கிறார்கள்.

இவர்களின் மூலமாகவே கல்வி சமூக முன்னேற்றத்தில் பங்காற்றுகின்றது. கல்வி தொடர்பாக ஏற்படுகின்ற நவீனமயப்படுதல்கள் மாணவர்களை ஈர்ப்பதோடு கற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வழிவகை செய்கின்றது. ஆரம்பகால கட்டத்தில் சிறுவர் கல்வி குறைவாகவே நோக்கப்பட்டது.மனிதன் நாகரீக வளர்ச்சியில் மற்றும் முன்னேற்றத்தில் சேர்த்து வைத்த அனுபவமும் அறிவும் கல்வியின் வளர்ச்சியில் அதிகமாக தேவைப்பட்டது.

சமூகத்தில் ஓர் ஆற்றல்மிக்க உறுப்பினராக மதிப்புக்கள், குறிக்கோள்கள், நம்பிக்கை, விருப்பங்கள், பழக்கவழக்கங்கள், பண்பாடு போன்றவற்றை விதைக்க வேண்டும். மனிதன் ஒரு கவிஞனாகவோ, தத்துவமேதையாகவோ, நல்ல ஆசிரியராகவோ,திறமை வாய்ந்த ஒரு மனிதனாக வளர கல்வி மிகவும் அவசியம். எனவே இப்படியான ஓர் சமூதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காக பாடசாலைக்கல்வியில் சமயம் வரலாறு, குடியியல் கல்வி, தொழில்நுட்பம் என அனைத்து சமூக துறைசார்ந்த அறிவும் மாணவர்களிற்கு போதிக்கப்படுகின்றது.

இதனால் மாணவர்கள் அறிவில் சிறந்து விளங்குவதோடு சிறந்த ஒழுக்கமுடையவர்களாகவும் திகழ்வார்கள். ஒரு சிறந்த சூழ்நிலையை உருவாக்க உடல், உள்ளம், மனவெழுச்சி,சமூக சிந்தனை ஆகிய சிந்தனைகள் வளர கல்வி அவசியம்.எனவே அவன் சமுதாய பண்பாட்டு சூழ்நிலைக்கு ஏற்றவாறு உலகில் பங்களிப்பை செய்ய கல்வி துணைபுரியும்.

கல்வி கற்ற ஒரு சமுதாயம் உருவாகின்ற போதே அங்கு பொருளாதார ரீதியிலும், பண்பாட்டு ரீதியிலும் சமூகம் வளர்ச்சியடையத்தொடங்கும். பொருளாதார ரீதியாக எடுத்து நோக்குவோமானால் கல்வி வளர்ச்சியின் விளைவாக மக்கள் தமது தேவைகளையும் நிறைவு செய்யும் வழிகளையும் தாமாகவே ஆராயத்தொடங்குவார்கள்.

கல்வி கற்றவர்கள் ஒருபோதும் வேலையின்மையை விரும்பமாட்டார்கள் தமது கல்விக்கு தகுந்த வேலை காணப்படாத விடத்திலும் தமக்கான தொழிலை தாமே உருவாக்கி தமக்கென்ற ஓர் அந்தஸ்தை பெற்றுக்கொள்ள முனைவார்கள்.ஓர் சமூகத்தில் வேலையற்றோர் எண்ணிக்கை குறைவடைகின்ற பொழுது அச்சமூகம் சிறந்த ஓர் எடுத்துக்காட்டான சமூகமாக மாறத்தொடங்குகின்றது.

பண்பாட்டு ரீதியாக எடுத்துநோக்குவோமானால் நமது முன்னோர்கள் கல்வி கற்றவர்களுக்கான சிறப்பை பல்வேறு வகையில் எடுத்துக்காட்டியுள்ளனர். “கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்றும் கல்லாதவன் மரத்திற்கு ஒப்பானவன்” என்று குறிப்பிடுகின்றார்.

சமூகத்தின் ஒவ்வொரு பிரஜையும் கற்றவராக விளங்கும் போது அச்சமூகம் ஏனைய சமூகங்களை விடமுன்னேற்றகரமாக மாற்றமடைகின்றது.

அறிவு சார்ந்த சமூகம் உருவாக்கப்படுகிறது. ஆசிரியர்கள் மூலமே சமூக பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வினை பெற்றுத் தரமுடியும் சமூகத்தில் ஓர் ஆற்றல் மிக்க உறுப்பினராக விளங்கவேண்டுமானால் சமூக மதிப்புகள், குறிக்கோள்கள், நம்பிக்கை, விருப்பங்க, பழக்க வழக்கங்கள் பண்பாடு போன்றவற்றை விதைக்க வேண்டும்.



# சமூகமயமாக்கலில் ஊடகங்களின் தாற்பரியங்கள்

**எம்.எப். எப். மாஹிரா**
நான்காம் வருடம் முதலாம் அரையாண்டு,
சிறப்பு கற்கை மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

சமூகத்தின் உயர்ந்த மனிதர்களாக மாணவர்களை இசைவாக்கம் அடையச்செய்யும் வாழ்நாள் செயன்முறையாக சமூகமயமாக்கல் உள்ளது.

இதில் வீடு, குடும்பம், பாடசாலை, சமூகம், சகபாடிகள், ஊடகங்கள் குறிப்பாக சமூக ஊடகங்கள் முகவர்களாக தொழிற்படுகின்றன, காத்திரமான பங்களிப்புக்களை வழங்கி வருகின்றன. இன்றைய உலகில் அச்சு ஊடகங்களையும் இலத்திரனியல் ஊடகங்களையும் விஞ்சி முந்திக்கொண்டு முன்னணியில் உள்ள கவர்ச்சியான ஊடகங்களாக சமூக ஊடகங்களை குறிப்பிட முடியும்.

நமது சமூகத்தில் ஊடகங்கள் தகவலைப் பரப்புதல், மக்களை சிந்திக்கச் செய்யுதல், மேலும் பொழுதுபோக்கு அளித்தல் என்பனவற்றின் மூலம் அவை நம் அன்றாட வாழ்க்கையின் ஓர் இன்றியமையாத பகுதியாக உள்ளன. இதற்குப் பிறகும், ஊடகங்கள் சமூகவியல் அடிப்படையில் சமூகமயமாக்கல் முகவராகவும் செயல்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய சமூக நிறுவனங்களான குடும்பம், கல்வி நிறுவனங்கள், மதம் போன்றவைகளையும் தாண்டி ஊடகமானது தனி மனிதனது சமூக நடத்தையை தீர்மானிப்பதை நவீன சமூகத்தில் அவதானிக்கலாம்.

இந்நிலையில், ஊடகத்துறையின் செயற்பாடானது மிகவும் காத்திரமானதாக அமைய வேண்டியுள்ளது.

ஒரு சமூகத்தில் ஊடகத்துறையானது ஒழுங்கான ஊடக ஒழுக்கக் கோவையை கடைப்பிடித்து சரியாக செய்யப்படும் போது ஒரு சிறந்த மனிதர்களுக்கு சிறந்த சமூகமயமாக்கலை வழங்க முடியும். புதிய தொலைத் தொடர்பு சாதனங்களின் வருகையின் காரணமாக இன்றைய உலகு ஒரு கிராமமாக அதனை விட ஒரு அறையாக கூட மாறியுள்ளது எனலாம்.

உலகில் எப்பகுதியில் நடக்கும் எந்த நிகழ்வாயினும் எம்மால் நேரடியாக பார்த்து அறிய முடியுமாகின்றது. இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள், சமூகத்தையும் பிரதேசத்தையும் நாட்டையும் நல்வழிப்படுத்துபவர்களாக எதிர்காலத்தில் மிளிரவுள்ள தற்கால மாணவர்கள் நற்பண்புகளுடன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வழிகாட்டப்படுவது பெற்றோரினதும் ஆசிரிய சமூகத்தினதும் சமூகத்தில் அங்கம் வகிக்கும் பெரியவர்களினதும் தலையாய பொறுப்பாகும்.

இப்பொறுப்பு தவறும் பட்சத்தில், ஆரோக்கியமற்ற, சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடக் கூடிய சமூகமொன்றையே நாம் எதிர்காலத்தில் காண முடியும். அறிவு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினால் எவையெல்லாம் நவீன கலாசாரமென்று அறிமுகப்படுத்தப்படுகிறதோ, அவையெல்லாம் அநாகரிகமாக மாறி, நாளைய தலைமுறையினரை அழித்துக்கொண்டிருக்கின்றன.

இந்த வகையில் தொலைத்தொடர்பு சாதனங்கள் மிக முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களான கணிணி, கையடக்கத் தொலைபேசிகள், மடிக்கணினி, டெப்லெட் போன்றன நமக்கு இன்று தொலைத்தாடர்பு சாதனங்கள் இன்றி வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு கோடிட்டுக் காட்ட வேண்டிய அம்சம் என்னவெனில் Internet இன் ஊடாக வியாபாரம், கல்வி மற்றும் பல நடவடிக்கைகளும் நடைபெறுவதுடன் கலாநிதிப் பட்டம் வரை நிகழ்நிலை ஊடாக மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களும் கிடைக்கப் பெறுகின்றன.

இது போன்ற பல சாதகமான விளைவுகள் எமது இளம் சந்ததியினரிடையே அவர்களின் நடத்தைகளில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தும் அதே வேளை ஊடகங்களானது அவர்களின் நடத்தைகளில் பாதகதான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது.

எங்கும் வியாபித்திருக்கும் சமூகத் தளங்களில் இன்றைய இளம் சந்ததியினர் தமது கையடக்கத் தொலைபேசிகளின் ஊடாக ஏனையவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதினால் தாம் இது வரை கண்டிராத வித்தியாசமான கலாசாரங்களை அறியும் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதுடன் இவை அவர்களின் நடத்தைகளில் பாதிப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

இந்த சமூகத்தளங்கள் எவ்வித வரையறைகளையும் கொண்டிராததன் காரணமாக கட்டிளைமையினரிடையே பண்பாட்டு வீழ்ச்சியின் வேகம் அதிகமாகும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

திரைப்படங்கள், கட்டிளமையினரிடையே எவ்வகையான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என மேற்கத்திய நாடுகளில் பல ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டன.

திரைப்படங்களை கண்டுகளிக்கும் பாடசாலைக் குழந்தைகளின் பொருளறிவு, மனப்பாங்குகள், உடல், நலம், நடத்தை என்பனவற்றில் திரைப்படங்கள் எவ்விதம் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என்பது இங்கு ஆராயப்பட்டது. திரைப்படங்களில் காட்சிகளை எளிதில் பாடசாலை சிறுவர்கள் மறப்பதில்லை எனவும் திரைப்படங்களில் காட்டப்படும் தவறான அல்லது ஓரளவு உண்மைக்கு மாறான விவாதங்களையும் உண்மைகள் என பிள்ளைகள் கருதுவதுடன் விளம்பரத்துக்கும் உண்மைக்கும் உள்ள வேறுபாடுகளை உணர்ந்து கொள்வதில்லை எனவும் அந்த ஆய்வுகளின் முடிவுகள் குறிப்பிடுவதுடன் பிறநாட்டு மக்களின் வாழ்க்கை முறைமைகளை தாழ்த்திக் காட்டுதல் அவர்களை எதிரியாக காட்டுதல் போன்ற திரைப்படங்களை பார்ப்பதன் காரணமாக பிற சமூகத்தினைப் பற்றிய தவறான எண்ணங்களை அவர்களிடையே ஏற்படுத்துகின்றன ஆனால் ஒரு சில சிறந்த திரைப்படங்கள் நாட்டு மக்களிடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்துகின்றன எனவும் ஆய்வு முடிவுகள் குறிப்பிடுகின்றன.

படங்களில் எடுத்துக்காட்டப்படும் நடத்தை முறைகள் அறநெறியை அடிப்படையாக கொண்டிருந்தால் அவற்றால் பாதிக்கப்படும் பிள்ளைகளின் நடத்தைகள் பண்புறும் ஆனால் பெரும்பாலும் இன்றைய திரைப்படங்கள் வன்முறை சார்ந்தாகவும், நெறி கெட்டதாகவும், மேற்கத்தைய கலாச்சாரங்களை அறிமுகப்படுத்துவதுமாகவே காணப்படுகின்றன.

நடிகர்களும், நடிகைகளும் எவ்வகையான நடை, உடை, பாவனைகளை திரைப்படங்களில் சித்தரிக்கின்றார்களோ அவற்றை பின்பற்றுவதில் கட்டிளமையினர் தாமதிப்பதில்லை.

அவ்வகையான நடை, உடை, பாவனைகளை பின்பற்ற மறுக்கும் கட்டிளமையினர் நாகரிகமற்றவர் என்ற பட்டியலினுள் அவர்களை சேர்த்து விடுவர். பெரும்பாலும் கட்டிளமையினரினால் பின்பற்றப்படும் நடத்தைகள் பண்பாடற்றதாக தமது கலாசாரத்தினை சீரழிப்பதற்காகவே காணப்படுகின்றது.

திரைப்படங்களின் இறுதியில் தீயோர் தண்டிக்கப்படுவதாக சித்தரிக்கப்பட்டாலும் 3 மணி நேரத்தைக் கொண்ட திரைப்படத்தில் 2.15 மணியாலத்துக்கு மேல் திரைப்படங்களிலே வன்முறைக் காட்சிகளும் தீயோரின் ஆடம்பர வாழ்க்கைமுறை எமது பாரம்பரிய கலாச்சாரத்துக்கு முரணாண காட்சிகளுமே காட்டப்படுகின்றன. படத்தின் வில்லனுக்கு கடைசி ஓரிரு நிமிடங்களில் மட்டுமே தண்டனை வழங்கப்படுவதாக சித்தரிக்கப்படுகின்றது.

திரைப்படங்களில் ஏதோ ஒன்றிரண்டு படங்களே நெறிவளர்ச்சிக்கு ஊக்கமளிக்கக் கூடியதாக இருக்கும் அதேவேளை, மறுபுறம் கொலைகள், காமம், கடத்தல், யுத்தம், தீய செயல் களையும் கருப்பொருளாகக் கொண்டு திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதனால் கட்டிளைமையினரிடையே அவை பல விரும்பத் தகாத மனவெழுச்சி சிக்கல்களையும் கெட்ட நடத்தைகளையும் எதிர்மறையான மனப்பாங்குகளையும் தோற்றுவிக்கின்றன. திரைப்படங்களைப் போன்றே திரைப்பட இறுவெட்டுகளும் திரைப்பட சஞ்சிகைகளும் மாணவரிடையே இச்சைகளைத் தூண்டி விடுகின்றன.

வியாபார நோக்கத்திற்கான விளம்பரங்கள் கட்டிளமையினர் எவ்வாறான முறையில் தமது உடைகளை அணிய வேண்டும் எவ்வகையான முறையில் உடல் கட்டமைப்பினைகொண்டிருக்க வேண்டும் எனச் சித்திரிக்கின்றது. குறிப்பாக கட்டிளமையினர் எப்போதும் ஏனைய கட்டிளமையினரினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதை விளம்பரங்களில் காட்டப்படுவதையே பின்பற்றுகின்றனர்.

சமூகமயமாக்கல் செயன்முறையிலே குடும்பம். பாடசாலை, சகபாடிக்குழு போன்றன வகிக்கும் வகிபாகத்தினைப் போல தொலைத் தொடர்பு சாதனங்கள் வகிப்பதில்லை எனக் கூற முடியாது.

கடந்த 30 வருட காலமாக தொழிநுட்ப முன்னேற்றத்தின் கண்டுபிடிப்புக்களினால் ஒவ்வொரு மனிதனிலும் சிந்தனையிலும், நம்பிக்கையிலும், மனப்பாங்கிலும், நடத்தைகளிலும் வாழ்க்கை முறைகளிலும் ஊடகங்கள் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஏனைய சமூகமயமாக்கல் முகவர்களான குடும்பம் சகபாடிக்குழு, பாடசாலை என்பவற்றில் தமது காலங்களை கழிக்கும் காலத்தை விட ஊடகங்களுடன் அதிகமான காலத்தை ஒருவன் இன்றைய நாட்களில் கழிக்கின்றான்.

இந்தவகையில் சமூக ஊடகங்களின் பாவனையானது மாணவர்களின் சமூகமயமாக்கல் மற்றும் சமூகமயமாக்கல் செயன்முறையில் சாதகமாகவும் பாதகமாகவும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதே தேசிய, சர்வதேச ஆய்வுகள் துல்லியமாக புலப்படுத்துகின்ற உண்மைகளாகும்.

அந்தவகையில் மாணவர்கள் திறன்பேசிகளை கையாளும் போது மிகவும் கவனமாகவும் முறையாகவும் திட்டமிட்டு அவற்றை கையாள வேண்டும். பெற்றோரின் மேற்பார்வையும் கண்காணிப்பும் ஆசிரியர்களின் வழிகாட்டலும் சமூகத்தின் விளிப்பூட்டலும் விடயத்தில் ஆரோக்கியமான சமூகமயமாக்கலை உறுதி செய்யும்.



கோலான் ஹைட்ஸ்

இஸ்ரேல்

# மிக ஆபத்தான தாக்குதல்

இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட சிரியாவின் கோலான் ஹைட்ஸ் பகுதியின் மஜ்தல் ஷம்ஸ் கிராமம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 12 இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த பகுதியின் காற்பந்து மைதானம் ஒன்றின் மீது வான்வழியாக தாக்குதல் நடாத்தப்பட்டதாக இஸேரலிய பாதுகாப்புப் படைகள் கூறியுள்ளன. கடந்த வருடம் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு இஸேரல் மீது நடத்திய தாக்குதலின் பின்னர் நடத்தப்பட்ட ஒரு ஆபத்தான தாக்குதலாக இது கருதப்படுகின்றது.

இந்நிலையில், இஸேரலிய பாதுகாப்புப் படைகள் இந்தத் தாக்குதலுக்கு ஹிஸ்புல்லாஹ் அமைப்பினரே காரணம் எனக் கூறினாலும் ஹிஸ்புல்லாஹ்வின் பேச்சாளர் மொஹமட் அஃபிப் இதை மறுத்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்க பயணத்தை நிறைவு செய்து விட்டு இஸேரலுக்கு திரும்பிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு குறித்த தாக்குதல் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், ஹிஸ்புல்லாஹ் அமைப்பு இதற்கு தகுந்த விலையை கொடுக்கும் என அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதலாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

# போராடி தோற்றது இலங்கை



இலங்கைக்கு எதிரான முதலாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் இந்தியா வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பல்லேகலவில் சனிக்கிழமை (27) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையின் அணித்தலைவர் சரித் அசலங்க, இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, அணித்தலைவர் சூரியகுமார் யாதவ்வின் 58 (26), றிஷப் பண்டின் 49 (33), யஷஸ்வி ஜைஸ்வாலின் 40 (21), ஷுப்மன் கில்லின் 34 (16), அக்ஸர் பட்டேலின் ஆட்டமிழக்காத 10 (05) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மதீஷ பத்திரண 4-0-40-4, வனிது ஹசரங்க 4-0-28-1 என்ற பெறுதிகளைப் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 214 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்கவின் 79 (48), குசல் மெண்டிஸின் 45 (27), குசல் பெரேராவின் 20 (14) ஓட்டங்களுடன் வெற்றியிலக்கை நோக்கி நகர்ந்து ஒரு விக்கெட் இழப்புக்கு 84 ஓட்டங்கள், இரண்டு விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்கள் எனப் பலமான நிலையில் காணப்பட்டிருந்தபோதும் இறுதி 9 விக்கெட்டுகளையும் 30 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்து 19.2 ஓவர்களில் 170 ஓட்டங்களையே பெற்று 43 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக சூரியகுமார் யாதவ் தெரிவானார். இந்நிலையில் இந்த ஆட்டத்தில் ஆட்டநாயகன் விருது வாங்கியதன் மூலம் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் விராட் கோலியின் மாபெரும் சாதனையை சூர்யகுமார் யாதவ் சமன் செய்துள்ளார் அதாவது சர்வதேச டி20 கிரிக்கெட்டில் அதிக முறை ஆட்டநாயகன் விருது வாங்கிய வீரர் என்ற விராட் கோலியின் (16 முறை) சாதனையை சூர்யகுமார் யாதவ் சமன் செய்துள்ளார்.



வொஷிங்டன்

ட்ரம்ப்புக்கே வெற்றி

## பிரபல ஜோதிடர் கணிப்பு


அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் இருந்து ஜோ பைடன் விலகி விடுவார் என்று முன்பே கணித்த ஜோதிடர் தற்போது டொனால்ட் டிரம்ப் தான் அடுத்த அமெரிக்க ஜனாதிபதி என்று கணித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வரும் நவம்பர் மாதம் நடைபெற இருக்கும் நிலையில் தேர்தலில் முதலில் டொனால்ட் டிரம்ப் மற்றும் ஜோ பைடன் ஆகிய இருவரும் மோதுவதாக இருந்தது. ஆனால் ஒருசில காரணங்களாக ஜோ பைடன் போட்டியில் இருந்து விலகிய நிலையில் தற்போது கமலா ஹாரிஸ் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுகிறார்.

குவாங்டாங்

பூச்சியால்

## பார்வை பரிபோனது




தனது முகத்தை வட்டமிட்டு தொந்தரவு செய்த பூச்சியை அடித்ததால், தனது இடது கண் பார்வையை இழந்துள்ளார் சீனாவைச் சேர்ந்த ஒருவர்.

சீனாவின் தெற்கு மாகாணமான குவாங்டாங்கில் உள்ள ஷென்சென் நகரில் வசித்து வரும் வூ என்பவரின் முகத்தில், பூச்சி ஒன்று வெகுநேரமாக வட்டமிட்டபடி தொந்தரவு செய்துள்ளது.

இதனால், ஆத்திரமடைந்த அவர், தனது இடது கண்ணின் மீது அமர்ந்த பூச்சியை பலமாக அடிக்கவே, அவரின் இடது கண்ணில் அடி பலமாக விழுந்துள்ளது.

இதனையடுத்து, சில மணி நேரத்திற்கு பிறகு கண்களில் வலி ஏற்பட்டு, கண்கள் சிவக்க ஆரம்பித்துள்ளது. இதனால், அச்சமடைந்த அவர், உடனடியாக மருத்துவரை அணுகியுள்ளார். அங்கு இவரை சோதனை செய்த மருத்துவர்கள், இவர், கான் 'ஜூன்க்டிவிடிஸ்' எனும் தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.



டெல்லி

இளைஞர்களிடையே

## இரு புற்றுநோய்கள் அதிகரிப்பு

தலை மற்றும் கழுத்து புற்றுநோய் தினத்தையொட்டி டெல்லியைச் சேர்ந்த கேன்சர் முக்த் பாரத் அறக்கட்டளை நடத்திய ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டன.

இதில் 1,869 புற்றுநோயாளிகளிடம் நடத்திய ஆய்வில் 26 % பேருக்கு தலை மற்றும் கழுத்து புற்றுநோய் இருப்பது றதெரியவந்துள்ளது.

டெல்லியைச் சேர்ந்த கேன்சர் முக்த் பாரத் அறக்கட்டளை, மார்ச் 1 முதல் ஜூன் 30 வரை தனது ஹெல்ப்லைன் எண்ணில் பெறப்பட்ட அழைப்புகளின் தரவுகளைத் தொகுத்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது,

"இந்தியாவில் அதிக புகையிலை நுகர்வு மற்றும் மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தொற்று காரணமாக தலை மற்றும் கழுத்து புற்றுநோய், குறிப்பாக இளைஞர்களிடையே அதிகரித்து வருகிறது.

முதல் 2 நிலைகளில் நோய் கண்டறியப்பட்டவர்களில் 80 சதவீதம் பேர் குணப்படுத்தப்படுகின்றனர்.

எனவே புகையிலை பழக்கத்தை கைவிடவும், நோயை முன்கூட்டியே கண்டறிவதற்கான ஆரம்ப பரிசோதனைகள் அவசியம் என்கிற விழிப்புணர்வையும் மக்களிடம் ஏற்படுத்த வேண்டும்." என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கோவை

தாய் அடித்த அடியால்

## 10 வயது சிறுமி பரிதாப மரணம்



தாயொருவர், தான் பெற்ற மகளை தினமும் அடித்து துன்புறுத்தி வந்துள்ள நிலையில், உள்காயம் காரணமாக சிறுநீரகம் பழுதாகி 10 வயது சிறுமி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். சிறுமியின், பிரேத பரிசோதனை அறிக்கையில் இத்தகவல் தெரிந்ததையடுத்து, தாயை பொலிஸார் கைது செய்தனர்.

கோவை, தெலுங்குபாளையம் மெய்யப்பன் நகரை சேர்ந்த தட்சிணாமூர்த்தி மற்றும் சாந்தலட்சுமி ஆகியோரின் மகளான 10 வயதான அனு ஸ்ரீ கடந்த மே மாதம், 17ஆம் திகதி கட்டிலில் இருந்து கீழே விழுந்ததாக கூறி, அருகில் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இதனையடுத்து குறித்த சிறுமி உயிரிழந்ததை மருத்துவர்கள் உறுதி செய்தனர்.

குமரி

பெண் கவுன்சிலரின் கணவர்

## வெட்டி கொலை



கன்னியாகுமரி அருகே முன்விரோதம் காரணமாக காங்கிரஸ் கவுன்சிலரின் கணவர் வெட்டி கொலை செய்யப்பட்ட வழக்கில் தலைமறைவான பிரபல ரவுடி உட்பட 6 பேர் கொண்ட கும்பலை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாரை அடுத்த பாரதபள்ளி பகுதியை சேர்ந்தவர் ஜாக்சன். இவரது மனைவி உஷா ராணி. இவர் திருவட்டார் பேரூராட்சி 10ஆவது வார்ட் காங்கிரஸ் கவுன்சிலராக உள்ளார். இவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 27ஆம் திகதி இரவு ஜாக்சனை, 6 பேர் கொண்ட கும்பல் அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் சரமாரியாக வெட்டி தாக்கியுள்ளனர்.

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடர்:

## சென். அந்தனிஸை வீழ்த்திய இசிப்பத்தன

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், கண்டி நித்தவெலவில் சனிக்கிழமை (27) நடைபெற்ற சென். அந்தனிஸ் கல்லூரியுடனான போட்டியில் 38-08 என்ற புள்ளிகள் கணக்கில் இசிப்பத்தன கல்லூரி வென்றது.

இந்நிலையில் றோயல் விளையாட்டு வளாகத்தில் நடைபெற்ற றோயல் கல்லூரியுடனான போட்டியில் 31-22 என்ற புள்ளிகள் கணக்கில் சென். பீற்றர்ஸ் கல்லூரி வென்றது.

இதேவேளை, ஹவ்லொக் பார்க்கில் நடைபெற்ற கிங்ஸ்வூட் கல்லூரியுடனான போட்டியில் 55-05 என்ற புள்ளிகள் கணக்கில் சென். ஜோசப் கல்லூரி வென்றது.




## கராத்தேயில் தேசிய மட்டத்துக்கு தெரிவு



செ.தி. பெருமாள்

மத்திய மாகாண பாடசாலை கராத்தேயில் கொத்மலை ஹரங்கல தேசிய பாடசாலையின் கராத்தே அணியைச் சேர்ந்த ஐந்து பேர் அகில இலங்கை போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இப்போட்டியில் காட்டா பிரிவில் முதலிடத்தையும், குமித்தே பிரிவில் இரண்டாமிடத்தையும் டி.ஜி.டி.யு. பண்டார வெற்றிப்பெற்றார்.

ஆர்.ஜி.கே.இ. சோமசிறி குழு பிரிவில் முதலிடம், கே.ஜி.ஐ.எஸ். கொட்டகேபிட்டிய குமித்தே பிரிவில் முதலாமிடத்தையும் காட்டா பிரிவில் மூன்றாமிடத்தையும் பெற்று அகில இலங்கை போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளார்.

டிஜிஎஸ்என் குழு பிரிவில் வெற்றி பெற்றது. பண்டார மற்றும் ஜி.எல்.டி.எஸ். லியனின் மாணவர்களும் அகில இலங்கைப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றனர்.

## ஒலிம்பிக்காக விரலைத் துண்டித்த வீரர்

பரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் பொருட்டு அவுஸ்திரேலியாவின் ஹொக்கி வீரரான மற் டோஸன் விரலின் பகுதியொன்றை துண்டித்துள்ளார்.

பயிற்சியின்போது 30 வயதான டோஸனின் வலது கை விரலொன்றானது இரண்டு வாரங்களுக்கு முன்னர் மோசமாக முறிவடைந்துள்ளது. சத்திரசிகிச்சை மூலம் இதை சரி செய்வதற்கு மாதக் கணக்காகும்.

இந்நிலையிலேயே விரலின் மடிக்கப்படும் பகுதி வரை தனது மூன்றாவது ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் பொருட்டு அகற்றத் தீர்மானித்துள்ளார்.

அந்தவகையில் சனிக்கிழமை (27) நடைபெற்ற ஆர்ஜென்டீனாவுக்கெதிரான குழு பி ஆரம்பப் போட்டியில் காயமடைந்த 16 நாள்களில் டோஸன் பங்கேற்றிருந்தார்.



பரிஸ் 2024: 400 மீற்றர் பிறீஸ்டைலில்

## தங்கம் வென்ற டிட்மஸ்



பிரான்ஸில் நடைபெற்று வரும் பரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளில், சனிக்கிழமை (27) நடைபெற்ற பெண்களுக்கான 400 மீற்றர் பிறீஸ்டைல் நீச்சல் போட்டியில் அவுஸ்திரேலியாவின் அரியானே டிட்மஸ் தங்கப் பதக்கம் வென்றார்.

கனடாவின் சம்மர் மக்கின்டொஷ் வெள்ளிப் பதக்கத்தையும், ஐக்கிய அமெரிக்காவின் கேட்டி லெடக்கி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

முதல் நாள் முடிவில் பதக்கப் பட்டியலில் மூன்று தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் அவுஸ்திரேலியா உள்ளது. இரண்டு தங்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்துடன் இரண்டாமிடத்தில் சீனாவும், ஒரு தங்கப் பதக்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள், இரண்டு வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் ஐக்கிய அமெரிக்காவும், ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள், ஒரு வெண்கலப் பதக்கத்துடன் நான்காமிடத்தில் பிரான்ஸ் உள்ளது. ஒரு தங்க, ஒரு வெள்ளிப், ஒரு வெண்கலப் பதக்கத்துடன் ஐந்தாமிடத்தில் தென்கொரியா உள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 29, ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.